# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, ஆனி 19ல (2-7-72) ஞாயிறு 1391 ஐ: அல் 20 புத்தகம் 25 இதழ் 32


## சுதந்திரன் மீது சி. ஐ. டி. பாய்ச்சல்!

இரகசியப் பொலிசார் சுதந்திரன் மீது பாய்ந்துள்ளனர்; கடந்த வியாழக்கிழமை (22-6-72) ஆசிரியர் இல்லாத சமயம் சுதந்திரன் அலுவலகத்துக்கு வந்திருந்த அரைடசினுக்கு மேற்பட்ட சி. ஐ. டி. பொலிசார் கடந்த சில வாரங்களாக வெளிவந்த சுதந்திரன் இதழ்களில் இடம் பெற்றிருந்த கட்டுரைகளின் மூலப்பிரதிகளை கைப்பற்றிச் சென்றதுடன் துணை ஆசிரியரையும் அழைத்து சென்று வாக்கு மூலம் எடுத்துள்ளனர்.

## மூன்று திங்களில்

# சுயநிர்ணய உரிமைகோரி

# விடுதலைப் போராட்டம்!

## 10,000 தொண்டர்கள் திரட்டப்படுவர்!

## ஆட்சியாளருக்கு இறுதி எச்சரிக்கை!

### ஜுலை 22க்குப் பின் பொதுக்கூட்டத்தடை மீறப்படும்!

### தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு முடிவுகள்!

புதிய அரசியல் சட்டத்தில் தமிழுக்கும், தமிழருக்கும் இழைக்கப்பட்டிருக்கும் அநீதிகளைத் துடைத் தெறிந்து சம உரிமை அளிக்கக்கூடிய திருத்தங்களை கொண்டுவருவதற்கு 1972 செப்டம்பர் 30 வரை ஆட்சியாளருக்கு மூன்று மாத அவகாசம் கொடுப்பதென்றும், இந்த மூன்று மாத காலத்துக்குள் ஆட்சியாளர் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இசைவாக அரசியல் சட்டத்தை திருத்தத் தவறினால், தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக குதிப்பதென்றும் இதற்காக முதலில் 10,000 தொண்டர்களை திரட்டி பயிற்சியளிப்பதென்றும் 25.6.72ல் கோப்பாயில் கூடிய தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு தீர்மானித்துள்ளது.

ஜுலை 22ம் திகதிக்கு முன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுக்கூட்டங்களுக்கும் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்க அரசு தவறினால் ஜுலை 22ல் ஹர்த்தால் நடத்துவதுடன் தடையை மீறிக் கூட்டங்களை நடத்துவதென்றும் தமிழர் கூட்டணி தீர்மானித்துள்ளது.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கும், உரிமைகளுக்கும் மிகவும் வலிமையுடனும் உக்கிரமாகவும் வாதாடும் பொருட்டு, தமிழர் கூட்டணி பா.உ.க்களை தேசியப் பேரவைக்கு செல்லுமாறும் நடவடிக்கைக்குழு கட்டளையிட்டுள்ளது.

25.6.72ல் கோப்பாயில் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**முன்னுரை:**

எதேச்சாதிகார முறையில் தயாரிக்கப்பட்ட ஓர் பிற்போக்கான அரசியல் அமைப்பினால் ஈழம் வாழ் தமிழ் மக்களுடைய சுயாதீனத்திற்கும் சுயமரியாதைக்கும் மனித உரிமைகளுக்குமே பேராபத்து சூழ்ந்த நேரத்தில் வரலாற்றுப் பெருமைமிக்க திருகோணமலை நகரில் 14-5-72 அன்று தமிழர் கூட்டணி உதயமாகியது. இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, அகில இலங்கைத் தமிழர் மகாநாடு, இன்னும் பல் வேறு மொழிவழித் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், மாணவர் இயக்கங்களின் பிரதிநிதிகள், கட்சிச் சார்பற்ற பிரமுகர்கள் ஆகியோர் சேர்ந்து இக் கூட்டணியை உருவாக்கினர்.

பத்து லட்சம் தமிழ் தோட்டத்தொழிலாளர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இடம் பெறமுடியாது, அவர்கள் எண்ணிக்கையையும் சேர்த்துச் சிங்களவருக்கு விகிதாசாரத்திற்கும் கூடிய பிரதிநிதித்துவம் வழங்கியிருக்கும் திரிபான தேர்தல் அமைப்பின் கீழ், கட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

### தமிழர் கூட்டணி முடிவுக்கு மாணவர் பேரவை வரவேற்பு!

தேசியப் பேரவைக்கு செல்லுமாறு தமிழர் கூட்டணிப் பா. உ.க்களைப் பணிப்பது என்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை மாணவர் பேரவை முழுமனதுடன் வரவேற்றிருக்கிறது.

''தமிழ் மாணவர் பேரவை தேசியப்பேரவைக்கு தமிழர் கூட்டணிப் பா. உ. க்கள் செல்வதை எதிர்ப்பதாகக்காட்டி, மாணவர் பேரவையை ஒரு பலாத்கார இயக்கம்போல சித்திரிப்பதற்கு நாளேடுகளும் அரசும் சூழ்ச்சி செய்து வருகின்றன. இதில் தமிழ் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. தமிழ்மாணவர் பேரவை தமிழர் கூட்டணியினர் தேசிய பேரவைக்கு செல்வதை முழுமனத்துடன் வரவேற்கிறது.''

மேற்கண்டவாறு மாணவர் பேரவையின் சிரேட்ட உறுப்பினர் ஒருவர் சுதந்திரனுக்கு அறிவித்துள்ளார்.

### சிறையில் வாடும் இளைஞரும் வரவேற்றனர்!

மே 22 ஹர்த்தால் போராட்டத்தை யடுத்து கைது செய்யப்பட்டு, கடந்த ஒரு திங்களுக்கு மேலாக யாழ் சிறைச்சாலையில் ரிமாண்ட் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் எழுபதுக்கு மேற்பட்ட இளைஞர்களும் மாணவர்களும் தமிழர் கூட்டணிப் பா. உ. க்கள் தேசியப்பேரவைக்கு செல்லவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளனர். தேசியப் பேரவைக்கு செல்வது என்ற தமிழர் கூட்டணி முடிவை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

### கவிஞருக்கு கைவிலங்கு

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் ஆனந்த விநாயகமும் சிறையிலடைக்கப்பட்டு இன்றுடன் 23 நாட்கள் ஆகின்றன. கவிஞர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் எதையும் அரசு இன்று வரை அறிவிக்க வில்லை.

கடந்த வாரம் வைத்திய பரிசோதனைக்காக கவிஞர் கைவிலங்குடன் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டாராம்!

## "அரசாங்கத்தில் தேசியசபை நம்பிக்கை இழந்துவிட்டது!"

### கொள்கை விளக்க உரைக்குத் தமிழர் கூட்டணி பா. உ.க்கள் திருத்தம்!

பிரதமரின் கொள்கை விளக்க உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பின்வரும் திருத்தங்களைக் கொண்டுவருவதென்று தமிழர் கூட்டணியின் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது:-

'ஆனால் கௌரவ பிரதம மந்திரியுடைய கொள்கை விளக்க உரையில் இவ்வரசாங்கம் இலங்கை வாழ் தமிழ் மக்களுடைய இன்றைய ஆழ்ந்த அதிருப்தியையோ அதற்குரிய காரணங்களையோ ஒரு சிறிதும் கவனத்தில் எடுத்ததை காட்டாததையிட்டும்; இந்நாட்டின் சனத்தொகையின் மூன்றிலொரு பகுதியினரான தமிழ் பேசும் மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதில் எவ்வித அக்கறையும் காட்டாததையிட்டும்; இலங்கை

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே: ராமச்சந்திரன்,
கொழும்பு-6.

கே: தமிழர் கூட்டணியின் இணைச்செயலாளர்களில் ஒருவரும் உணர்ச்சிக்கவிஞருமான காசி ஆனந்தன் கொலைவெறியைத் தூண்டிவிடும் அளவுக்கு வெறிபிடித்துப் பேசியதாக கம்யூனிஸ்ட் ஏடான புதுயுகம் புலம்பியிருக்கிறதே, உண்மையா?

ப: அரசியலில் மாற்றுக் கருத்துள்ளவர்களை கொலை செய்வது கம்யூனிஸ்டுகளின் தத்துவமே தவிர தமிழர்களின் தத்துவம் அல்ல—ஸ்டாலினையும், பெரியாவையும், நாகியையும் மற்றும் எத்தனையோ பெரும் தலைவர்களையும் அரசியலுக்காக படுகொலை புரிந்தவர்கள் தாம் இந்தக் கம்யூனிஸ்டுகள். இப்படிப்பட்டவர்கள் இன்று வன்முறைக்கு எதிராக வரைந்து தள்ளுவது சிரிப்புக்கிடமானது.

ஆனால், தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை அது தமிழர் பண்பாட்டில் ஊறி வளர்ந்த கட்சி. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தையே தனது இலட்சியத்தை அடையும் மார்க்கமாகக் கொண்ட கட்சி. இந்தக் கட்சியிலுள்ள கடைசித்தொண்டன்கூட வன்முறையைப் பின்பற்றவோ தூண்டவோ மாட்டான். இப்படியிருக்கும்போது கட்சியில் பல்லாண்டுகளாக ஊறிவளர்ந்த உணர்ச்சிக் கவிஞரா வன்முறையைத் தூண்டிவிடுவார்? அதுமட்டுமன்றி கவிஞர் ஒரு சிறந்த காந்திய பக்தர்கூட.

கவிஞர் யாழ்ப்பாணக் கூட்டத்தில் என்ன பேசினார் என்பது பத்திரிகைகளில் முழுமையாகப் பிரசுரிக்கப்படவில்லை. சுதந்திரனுக்கும் அவரது முழுமையான பேச்சுக் கிடைக்கவில்லை. அவர் தாம் கூறியதென்ன வென்பதை மட்டுநகரில் வைத்து என்னிடம் கூறினார்.

தமிழ்த்துரோகிகள் இயற்கையாக சாகக்கூடாதென்றும் தமிழ் இனத்துக்கு தாம் இழைத்தது துரோகம் என்பதை தமிழ் மக்களே அவர்களுக்கு வருங்காலத்தில் உணர்த்தவேண்டும் என்றும், அதனால் தங்கள் தவற்றை அவர்கள் உணர்ந்து மனம் வருந்தி நொந்திருந்து தாமாகவே சமாதி நிலையை அடையும் நிலைதோன்ற வேண்டுமென்றுமே தான் கூறியதாக கவிஞர் கூறியிருந்தார். தனது பேச்சை முழுமையாக எழுதி சுதந்திரனுக்கு தருவதாகவும் கூறியிருந்தார். அதற்குள் அவர் கைது செய்யப்பட்டுவிட்டார்.

எனவே வன்முறைவாதிகள் கம்யூனிஸ்டுகளே தவிர தமிழரசுக் கட்சிக்காரரல்ல என்பதை புதுயுகத்தார் புரிந்துகொள்ளவேண்டும்!

ஃ

காண்டீபன்
சுழிபுரம்

கே: கவிஞர் காசி ஆனந்தன்கைதுசெய்யப்பட்டவிஷயத்தை ஏனைய நாளேடுகள் முக்கியத்துவம் கொடுத்து தலைப்பு செய்தியாக வெளியிட்ட நேரத்தில் 'தினபதி' மட்டும் அதை குனுக்கி மூலைக்குள் வெளியிட்டதேன்?

ப: சூரிய ஒளியை குடத்துள் அடைத்து வைக்க முயலும் முட்டாள் தனம்தான் இதற்கு காரணம்!

ஃ

அ. ப. சிங்கம்,
தலவாக்கொல்லை.

கே: குயிலுக்குத்தான் கடவுள் குஞ்சு பொரிக்க கற்றுக்கொடுக்கவில்லையே இதே போல் தமிழனுக்கும் ஆளும் முறையைக் கற்றுக்கொடுக்காமல் இருந்தால் மாற்றானின் கூட்டில் முட்டையிட்டு விட்டு குஞ்சு உயிருடன் வருகிறதா என்று பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியதுதானு?

கே: இந்தக்கேள்வி அவசியமில்லை ஏனெனில் தமிழினம் ஆண்ட இனம்—ஆட்சி முறை தெரிந்த இனம்—எதிர்காலத்தில் ஆளப்போகிற இனம்!

ஃ

கே. பாலச்சந்திரன்,
கொழும்பு-6.

கே: தமிழரசுக்கட்சி உடுப்பிட்டியில் திரு. மு. சிவசிதம்பரத்தை தோற்கடித்தது ஒரு பெரிய துரோகமென்றும், அதேபோல வட்டுக்கோட்டையில் தளபதி அமிர்தலிங்கத்தை தோற்கடித்தது தமிழ் காங்கிரஸ் செய்த ஒரு பெரிய துரோகமென்றும் திரு. ஆனந்தசங்கரி கூறியிருக்கிறாரே இது சரியா?

ப: திரு. ஆனந்தசங்கரியின் இந்த உதாரணம் முழுக்க முழுக்கத்தவறானது. உடுப்பிட்டியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற ஜெயக்கொடி அவர்கள் துரோகியாக மாறவில்லை. தமிழினத்தின் தன்மானம் காக்கும் விடுதலைப் படையில் ஒருவராக முன்னணியில் நிற்கிறார். தமிழ் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்ட தியாகராசா தான் முழுத்துரோகியாகி இனத்தை காட்டிக்கொடுத்திருக்கிறார்!

ஃ

தாவடி தாசன்,
வெளிமடை.

கே: எனக்குச் சவால் விட்ட தமிழரசார் திருகோணமலைக்கு ஓடி ஒழிந்து கொண்டார்கள். நான் அவர்களை மன்னித்துவிட்டேன் என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறாரே கல்வியமைச்சர்!

ப: பனித்தியாகரின் வருத்தம் கல்வியமைச்சரையும் பீடித்துவிட்டதுபோலும்!

ஃ

ந. கணேசமூர்த்தி,
பொந்திபுலம்,
காரைநகர்.

கே: அறிஞர் அண்ணா இன்றிருந்தால்...

ப: ஈழத்தமிழனின் நிலையை எண்ணி அவரது இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கும்!

கே: கலைஞர் கருணாநிதி பற்றி இருவரிகள்...

ப: தமிழினத்தின் பெருநிதி! அண்ணாவின் வாரிசு!

தாஸ்-ஸ்ரீராஜா,
மிருசுவில் வடக்கு.

கே: 'பனி'யின் நவீன திருவிளையாடல்கள் எல்லாம் இடையில் வந்தவையா? அல்லது கல்லூரி அதிபராய் இருந்தபோதா? அப்படியானால் கல்லூரி நிர்வாகம் எப்படியிருந்திருக்கும்?

ப: 'அங்கொடை' போல இருந்திருக்கும்!

கே: நாம் 'பனி'க்கு 'அலம்பல் அங்கொடை' எனவும் அரசியல் அறிவற்ற நல்லூர் 'சின்னவனுக்கு' 'தவறணை தாசன்' எனவும் பெயரிட நினைக்கின்றோம். தங்கள் யோசனை என்ன?

ப: பொருத்தமானபெயர்களை தேர்ந்தெடுப்பதில் நீங்கள் கெட்டிக்காரர்கள்!

ஃ

ரி. எஸ். ரஞ்சன்,
யாழ்ப்பாணம்.

கே: தந்தை செல்வா எதிர்க்கட்சித் தலைவரானால் தமிழரின் நிலை எப்படி இருக்கும்?

ப: எவ்விதபயனும் ஏற்படாது—ஆளுங்கட்சி தலைவரானால் மட்டுமே பயன் ஏற்படும்!

ஃ

த. செல்வராசா,
புங்குடுதீவு-6.

கே: மாணவர்கள் செய்யும் தவறுகள் யாவுக்கும் தமிழரசுக் கட்சிதான் காரணம் என கூறுகின்றார்கள்—காரணம் என்ன?

ப: மாணவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சிக்காரர்களாக இருப்பதால்!

ஃ

சூ. குறூஸ்புனித குமரன்,
யாழ்ப்பாணம்.

கே: கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன், தமிழரசுக் கட்சியின் கோட்டையாகிய வட்டுக்கோட்டை நொருங்கிவிட்டதாகவும், வட்டுக்கோட்டை மக்கள் தமிழரசுக் கட்சி மீது நம்பிக்கை இழந்து கூட்டணிமீது நம்பிக்கை வைக்கிறார்கள் என்று கூறியுள்ளாரே அது உண்மைதானு?

ப: சிங்கம் இல்லாதநேரம் பார்த்து சிறுநரி ஒன்று ஊளையிட்டுவிட்டுப் போயிருக்கிறது —அதற்காக சிங்கத்தின் வீரம் அழிந்துவிட்டதென்பதா அர்த்தம்?

ஃ

ஸ்ரீமுருகதாசன்,
பண்ணாகம்.

கே: தமிழ்மக்களின் நல்வாழ்வுக்காக அடிபட்டு உதைபட்டு இரத்தம் சிந்தி மனைவியோடு சென்று சிறையிருந்த தளபதி அமிர்தலிங்கத்தை விடுத்து துரோகி ஒருவரை நா. உ. ஆக்கிய வட்டுக்கோட்டை மக்கள் நன்றி மறந்தவரல்லவா குயுக்தியாரே?

ப: நடந்து முடிந்தவற்றை நினைப்பதைவிட, இனிமேல் நடக்கவேண்டியதைப் பற்றி நினைப்பது நல்லது என்று நினைக்கிறேன்!

கே: வடக்கேவரும் அமைச்சர்கள் எல்லோரும் காரை நகரிலே நின்று தளபதி அமிரையும் தமிழரசுக் கட்சியையும் திட்டுவதன் மர்மம் என்ன?

ப: 'பனி'யின் பக்கத்துணை தான்!

**வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி**

**திருவாளர் குயுக்தியார்,**
**மே/பா சுதந்திரன்**
**194 ஏ, பண்டாரநாயக்கா விதி,**
**கொழும்பு—12.**

# சரணம் தாயே!

—கொற்றை பி. கிருஷ்ணனந்தன்

அம்மா சரணமம்மா — எம்மை
ஆதரித் தாண்டிடுவாய்!
எம்மால் நீங்களின்றி — இங்கே
இயங்கிட முடியாதம்மா!


எம்மினம் உங்களுக்கு — அடிமை
என்பதை மறுக்கவில்லை!
பம்மாத்துப் பண்ணுகின்ற — இந்தப்
பாவிகள் பலபேர்கள்—

எங்களை எட்டப்பராம்—அம்மா
இப்படிச் சொல்லலாமோ?
தங்களையும் இகழ் வார்—எங்கள்
தமிழர்கள் இந்நாட்டில்—

வாழும் வழி தெரியார்—இவர் தம்
வாழ்வினைப் பாழாக்கிறார்!
சூழுங் கிடைத்திடாமல்— இவர்கள்
கூவிடப் போகிறாரே!

கல்லால் எறிந்திடுறார் — அம்மா
காரை மறித்திடுறார்!
பொல்லால் அடித்திடுறார் — எம்மைப்
"பொம்மை" யாம் கூறுகிறார்!

இப்படிச் செய்யலாமோ? இவர்க்கு
ஏற்றதோர் பாடத்தினைச்
செப்பமாய்க் காட்டிடனும் — இதனைச்
சீக்கிரம் செய்திடம்மா!



20-5-72ல் இலண்டன் வாழ் தமிழர்கள் இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து மாபெரும் கண்டன ஊர்வலமொன்றை நடத்தினார்கள். இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கத்தினர் நடத்திய அந்தக் கண்டன ஊர்வலக் காட்சிகளையே மேலே காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் சிறிது கடமை பெரிது!

அன்பு நண்பா,

சென்ற கிழமை கோப்பாயில் கூடிய நம்முடைய தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு தீர்க்கமாகச் சிந்தித்து, தெளிவாக ஆராய்ந்து அரசியல் விவேகம் நிறைந்த நல்ல முடிவுகளை எடுத்திருப்பதனை நாட்டோர் வரவேற்றிடுவர் என்பதில் துளியும் ஐயமில்லை — இதற்கு முன் நம்முடைய தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளை எந்நாளும் திட்டித்தீர்த்து ஆசிரியத் தலையங்கம் தீட்டிடுவதிலேயே தனிச் சுவை கண்டிடும் 'டெயிலி மிறர்' கூட, தமிழர் கூட்டணியின் முடிவினைப் பாராட்டி தலையங்கம் தீட்டியிருக்கிறதென்றால் — அம்முடிவுகள் மாற்றுக் கருத்துள்ளோரின் நெஞ்சங்களைக்கூட எவ்வளவு தூரம் ஊடுருவி சிந்தித்திட வைத்திருக்கின்றன என்பது தெளிவாகிறதல்லவா?

தமிழர் கூட்டணியின் முடிவுகள் இன்னும் வேகமானதாக இல்லை; அதி தீவிரமானதாக இல்லை; என்று உணர்ச்சிமயமான ஒரு சில இளைஞர்களும் மாணவர்களும் சற்று குமுறுவதும் நானறிவேன். ஆனுல் தமிழர் கூட்டணி தீட்டிடும் திட்டங்கள், தீவிரவாதிகளை திருப்தி செய்தால் மட்டும் போதாது — மிதவாதிகளையும் தன்னுடன் இழுத்துச் செல்லக்கூடியதாகவும் அவை இருந்திட வேண்டும்!

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு தற்பொழுது எடுத்துள்ள முடிவுகள், தமிழினத்திலுள்ள தீவிரவாதிகளையும் மிதவாதிகளையும் ஒரே சமயத்தில் திருப்திப்படுத்தி — இரு கருத்துடையவர்களையும் விடுதலை இலட்சியத்தை நோக்கி இழுத்துச் செல்லும் சக்திவாய்ந்தவை என்று நான் கருதுகிறேன்!

நண்பா, தேசிய அரச பேரவையை பகிஷ்கரிப்பதா இல்லையா என்ற பிரச்சினைக்குள் தலையை நீட்டி குட்டை குழப்பி — நாள்தோறும் பொய் எழுதி — தமிழர் கூட்டணிக்கும் இயக்கத்தின் ஈட்டி முனைகளாக விளங்கும் தமிழ் இளைஞர்கள், மாணவர்களுக்குமிடையே பிளவுகளையும் பிரிவுகளையும் மூட்டி தமிழர் கூட்டணியை உடைத்துவிட முயன்ற சக்திகளின் மூக்கை அறுத்துவிட்ட இளைய தமிழ் சமுதாயத்தை பாராட்டுகிறேன் — போற்றுகிறேன்!

தேசிய அரசுப் பேரவையைப் பகிஷ்கரித்திட வேண்டுமென்று கோரி மாணவர் பேரவையைச் சேர்ந்த 100 பேர், 500 பேர் 1000 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்றெல்லாம் நாளேடுகள் தம்முடைய மனம் போன போக்கில் எட்டு பத்தி தலைப்பு கொடுத்து செய்திகளை வெளியிட்டு இன்பம் அடைந்த போதிலும் உண்மையில் நான் அறிந்தவரை மாணவர் பேரவையைச் சேர்ந்த எவராவது பகிஷ்கரிப்பை ஆதரித்ததாக இல்லை!

மாணவர் பேரவையினர் என்றும் தீவிர இளைஞர்கள் என்றும் வேடமிட்டுக்கொண்டு சில அரசியல் வல்லூறுகள் தங்கள் கையாட்கள் சிலரை ஏவிவிட்டு பகிஷ்கரிப்புக் கோஷமெழுப்பி தமிழர் கூட்டணிக் கூட்டத்தை நடத்தவிடாமல் குழப்பிவிட முயன்று படுதோல்வியடைந்திருக்கின்றனவே தவிர உண்மையான இலட்சியப்பற்றுள்ள தீவிரவாதிகளான இளைஞர்கள் யாரும் பகிஷ்கரிப்பை ஆதரித்து கூட்டத்தை குழப்பிவிடும் அளவுக்கு கோஷம் எழுப்பவுமில்லை; கட்டுப்பாடு இழக்கவுமில்லை!

மாணவர் பேரவை உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் தேசியப் பேரவைக்கு செல்வதை வரவேற்கிறார்களே தவிர பகிஷ்கரிப்பதை ஆதரித்திடவில்லை — களத்தில் நின்று போராடி இன்று காராக்கிருகத்தில் அடைபட்டு இருக்கும் மாணவர்களும் இளைஞர்களும் கூட ஒருவர்கூட பிச்சமின்றி அனைவரும் தமிழர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமென்கின்ற கருத்தை மிகவும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்கள்!

எனவே தேசிய அரசப் பேரவைக்கு செல்வதென்று தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு முடிவு எடுத்ததை வைத்துக்கொண்டு, தமிழ் இளைஞர்களையும், மாணவர்களையும் தமிழர் கூட்டணியிலிருந்து பிரித்து திசைதிருப்பி விடலாமென்று அரசியல் சந்தர்ப்பவாதிகள் யாராவது எதிர்பார்ப்பார்களானால் — நிச்சயம் அவர்கள் ஏமாறுவார்கள்!

தேசியப் பேரவைக்கு செல்வதா இல்லையா என்ற பிரச்சினை தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் மனம் திறந்து விவாதிக்கப்பட்டு — இரு கருத்திலுமுள்ள சாதக பாதக நிலைகள் அலசி ஆராயப்பட்டு — இறுதியில் தேசியப் பேரவைக்கு செல்லுமாறு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பணிப்பதென்ற தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழர் கூட்டணியின் பணிப்பின்படி, தேசியப் பேரவைக்கு செல்லும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் அலுவலகங்களுக்கு சென்று அற்ப சலுகைகளுக்கும் இடமாற்றங்களுக்கும் கையேந்தி நிற்கின்ற நிலை இனியும் தொடரக்கூடாது. அயரிஷ் விடுதலை இயக்கத்தினர் எப்படி பிரிட்டிஷ் அரசனுக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்து நாடாளுமன்றத்துக்கு சென்று அங்கிருந்தே அரசனை எதிர்த்து அயரிஷ் விடுதலைக்காக குரல் எழுப்பினர்களோ அதேபோல நம்முடைய கூட்டணி பா. உ. க்களும் தமிழினத்தின் விடுதலைக் குரலை தேசியப் பேரவையில் ஓங்கி ஒலித்திட வேண்டும்!

**இதைவிடுத்து, ஆனைவேட்டைக்காக அனுப்பப்பட்ட நீங்கள், நாடாளுமன்றத்தில் முயல் வேட்டைகளில் இனியும் ஈடுபடுவீர்களானுல், நிச்சயம் தமிழ் மாணவர்களும் இளைஞர்களும் உங்களை மன்னிக்க மாட்டார்கள்! இதை தமிழர் கூட்டணி பா. உ. க்கள் மனதில் வைத்துக்கொண்டு தீவிரமாகச் செயல் பட வேண்டும்!**

இதே நேரத்தில், தமிழ் மக்களும், இடமாற்றம் உத்தியோகம் போன்ற சில்லறை சலுகைகளை பெற்றுத்தரும்படி தமிழர் கூட்டணி பா. உ. க்களிடம் கேட்டு, அவர்களுக்கு இக்கட்டான ஒரு நிலையைத்தோற்றுவிக்காது இருந்திடவேண்டும். ''நக்குண்டார் நாவிழந்தார்'' என்பதை தமிழ் மக்களும் நம்முடைய பா. உ. க்களும் உணர்ந்திடவேண்டும்!

## அரசியல் அரங்கம்

தமிழர் கூட்டணி போர்த்திட்டங்களை வகுத்திடும் குழுவொன்றையும் தொண்டர் படைதிரட்டிடும்குழுவொன்றையும் நியமித்துவிட்டது! பல்வேறு வகையான போராட்டத் திட்டங்கள் தயாராகி விட்டன. இன்னும் பல திட்டங்கள் ஆலோசனையில் இருக்கின்றன.

**மூன்று திங்களில் தொடங்க விருக்கும் விடுதலைப் போராட்டம், தமிழ் இனத்தின் இறுதி இலட்சியம் நிறைவேறும் வரை சோர்ந்துவிடாமல், தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். அதற்கேற்ற வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும்!**

திட்டங்கள் எத்தனைதான் இருந்தாலும், அதைச் செயற்படுத்தகட்டுப்பாடான தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் உருவாக்கப்பட வேண்டும்! செயல் செயல் என உணர்ச்சியின் உச்சக்கட்டத்தில் குமுறிநிற்கும் வீர இளைஞர்கள், வரப்போகும் விடுதலைப்போராட்டத்தில் குதித்திடதயாராகிடவேண்டும். தமிழர் கூட்டணியின்தொண்டர்படையில் ஆயிரமாயிரமாக அணிதிரண்டு பயிற்சிபெற முன் வர வேண்டும!

ஆரம்பத்தில் 10,000 தொண்டர்களைத் திரட்டிப் பயிற்சி யளிப்பதென தமிழர் கூட்டணி தீர்மானித்திருக்கிறது. எனவே ஆங்காங்குள்ள உணர்ச்சி மிகு காளைகள் தமிழர் கூட்டணியின் விடுதலைப்போராட்டத் தொண்டர் படையில் உடனடியாகச் சேர்ந்திட முன்வரவேண்டும்!

மூன்று திங்களில் இந்நாட்டில் மூண்டெழ விருக்கும் போராட்டம் முத்தமிழை இந்நாட்டில் வாழ வைக்கும் போராட்டம்! தமிழினத்தின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மீட்கும் போராட்டம்! இந்தப் போராட்டம் ஒரு நாளிலோ இரு நாளிலோ, ஒரு திங்களிலோ, ஓர் ஆண்டிலோ முடிவடைகின்ற ஒரு போராட்டமல்ல! இந்நாட்டில் தமிழ்தேசிய இனம் தன்னைத்தான் ஆளுகின்ற ஒரு நிலை தோன்றுமட்டும் தொடரவிருக்கின்ற இறுதிப் போராட்டம்!

# தொண்டர்களைத் திரட்டுவோம்! தூயபோர் துவக்குவோம்!

**தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு, ஆறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து, இக்கோரிக்கைகளுக்கு அங்கிகாரம் அளிக்கும் வகையில் அரசியல் சட்டம் 1972 செப்டம்பர் 30ம் திகதிக்கு முன் திருத்தப்படவேண்டும் என்றும் அப்படித்திருத்தப்படாவிடின், தமிழ் இனத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் இனத்தின் அரசியல் பொருளாதார சமூக கலாசார வாழ்வை அமைத்துக் கொள்வதற்கும் சாத்வீகப்போராட்டத்தில் இறங்குவதென நீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

இந்தத்தீர்மானம், நீதி வழங்குவதற்கு அரசுக்கு மீண்டும் ஓர் வாய்ப்பு கொடுத்திருக்கும் அதே வேளையில், சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு தமிழினம் தன்னைத்தானே தயார் செய்து கொள்ளவும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது!

அரசாங்கம், அரசியல் சட்டத்தைத் திருத்தி நாம் விடுத்துள்ள ஆறு அம்சக் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கும் என்று கருத்துக் குருடனைத் தவிர வேறு யாரும் எதிர்பார்க்க மாட்டான். ஆனுலும் போராட்ட முறை என்று ஒன்று இருக்கிறது. அந்த முறைப்படி கோரிக்கைகளைச் சமர்ப்பித்து, காலக்கெடு கொடுத்து, அந்தக்காலக் கெடுவின் முடிவில் விடுதலைப்போராட்டத்தை துவங்குவதென்ற தமிழர் கூட்டணியின் முடிவினை அரசியல் நாகரிகம் தெரிந்த எவரும் நிச்சயம் வரவேற்றிடவே செய்வர்!

எனவேதான் நண்பா, செப்டம்பர் 30ம் திகதி முடியும், இந்த மூன்று திங்கள் இடைவேளைக்குள் தமிழ் இனம் விடுதலைப்போராட்டத்துக்கு தயாராகிடவேண்டும்! திணவெடுத்த தோள்களுடன் செந்தமிழைக் காத்திடும் [illegible] கட்டு நிற்[illegible] இன்னும் மூன்று திங்களில் மறுபடியும் களம் காணும் சந்தர்ப்பம் கிடைத்திடப்போகிறது!

எனவே தமிழ் பேசும் மக்கள் வாழ்வின் எத்துறையில் இருந்தாலும்—விடுதலைப் போராட்டத்துக்கு, அப்போராட்டத்தின் பயனுக ஏற்படக்கூடிய தொல்லைகளையும் துன்பங்களையும் தாங்கிக்கொள்வதற்கு இந்த மூன்று திங்கள் இடைக்காலத்திற்குள் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்!

தமிழ்த் தேசிய இனம் ஆகக்குறைந்தது இன்னும் ஓர் பத்தாண்டு காலத்துக்கிடையில் தமிழ் ஈழத்தில் தனது சுயாதீனத்தை நிலைநாட்டி தன்னுட்சியை நிறுவிக்கொள்ளத் தவறிவிடுமானுல், இந்நாட்டில் தனது தனித்துவத்தை இழந்து அழிந்தொழிந்து விடுமென்பதை யாரும் மறுத்திட முடியாது! எனவே அக்டோபர் போராட்டம் தமிழ் ஈழத்தில் தன்னுட்சியை — தமிழாட்சியை — நிறுவும் போராட்டத்தின் துவக்கமாக அமையவிருக்கிறது!

எனவே நண்பா, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போருக்கு இன்று தேவைப்படுபவர்கள் தமிழ் மண்ணின் விடுதலைக்காக எதையும் இழக்கத்தயாரான கட்டுப்பாடு மிக்க பல்லாயிரக்கணக்கான இளைஞர்களே! துப்பாக்கியும் கைக்குண்டும் நமக்கு வேண்டாம்! துடிப்பும் உறுதியும், எதையும் தாங்கும் இதயமும் கொண்ட வீர இளைஞர்கள் பத்தாயிரம் பேர் போதும்—நமது போராட்டத்தின் முதல் கட்டத்துக்கு!

மற்றொன்றும் கூறுவேன் நண்பா, நமது தமிழர் கூட்டணியை எப்பாடுபட்டாயினும் உடைத்துவிடவும், தமிழர் கூட்டணி மீது தமிழ் மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திடவும் இந்நாட்டின் நாளேடுகள், குறிப்பாக தினபதியும் தினகரனும் பச்சைப் பொய்ச் செய்திகளை நாள்தோறும் எட்டுப்பத்தி தலைப்பு கொடுத்து வெளியிட்டுவருகின்றன. இந்த ஏடுகளை என்ன செய்வது என்று நான் கூறமாட்டேன்! என்ன செய்யவேண்டும் என்பது தமிழ் இளைஞர்களுக்குத் தெரியும்!

தமிழ் இனத்தையோ தமிழ் இளைஞர்களையோ, தமிழர் கூட்டணியையோ தாம்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சரணாகதியா?

அரசியல் அமைப்பைத் திருத்தம் செய்வதற்கும் தேசியப் பேரவையின் உள்ளும் வெளியிலும் தமிழ்மக்களின் உரிமைப் போரை வழி நடத்துவதற்குமான உறுதியோடு தேசியப் பேரவைக்கு செல்லுமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு பணித்திருக்கிறது.

தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழுவின் பணிப்பின் படி தமிழர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பதின்மூன்று பேரும் தேசியப் பேரவைக்கு செல்லவிருக்கிறார்கள்.

தேசியப் பேரவைக்கு செல்லுவது என்று தமிழர் கூட்டணி எடுத்த முடிவை வைத்துக்கொண்டு தமிழ் இளைஞர்களின் வேகத்தையும் உற்சாகத்தையும் மழுங்கடித்திடச் செய்யவும் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை எழுச்சியை மட்டம்தட்டவும், திட்டமிட்ட சூழ்ச்சிகளிலும் பொய்ப் பிரசாரங்களிலும் தமிழினத்தை அழித்தொழித்திடும் ஒரே நோக்குடன் நடத்தப்பட்டுவரும் சிங்கள முதலாளிகளின் தமிழ் நாளேடுகள் தீவிரமாக இறங்கியிருக்கின்றன. இந்தத் திட்டமிட்ட சதிக்கு அனுசரணையாக விரக்தியடைந்த அரசியல் ஆதாயம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்ட சில அரசியல்வாதிகளும் பின்னணியில் இருந்துவருகிறார்கள்.

தமிழர் கூட்டணியினர் தேசியப் பேரவைக்கு செல்வதன்மூலம் சரணாகதியடைந்துவிட்டனர் என்ற ஒரு திட்டமிட்ட பொய்யைக் கட்டி எழுப்பி உணர்ச்சிமிக்க இளைஞர்களினதும் மாணவர்களினதும் உள்ளங்களை குழப்பி. தமிழர் கூட்டணிக்கும் தமிழ் இளைஞர்களுக்குமிடையே கருத்து வேறுபாட்டையும் மோதலையும் ஏற்படுத்தி — தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைத்து—தமிழர் உரிமைப்போராட்டத்தையும் உத்வேகத்தையும் முனை மழுங்க அடிக்கச்செய்வதில் இந்தச் சக்திகள் அனைத்தும் இன்று கூட்டாக வேலை செய்துவருகின்றன.

எனவே இந்த நேரத்தில் தமிழினம்—குறிப்பாக இளைஞர்கள் வெறுமனே உணர்ச்சிக்கு மட்டும் அடிமையாகாது அறிவுக் கண்கொண்டு நிலைமைகளை சிந்தித்து — தமிழினத்தின் ஒற்றுமையை சிதறடிக்க முயலும் இந்த நாச சக்திகளின் திட்டமிட்ட சூழ்ச்சியை முறியடித்திடவேண்டும்!

தமிழர் கூட்டணியினர் தேசியப் பேரவைக்கு செல்வதற்கு எதிராக, மாணவர்களின் உள்ளங்களை குழப்பிவிடும் முறையில் நடத்தப்படும் பிரசாரத்தில் ஒரேயொரு வாதம் எழுப்பப்படுகிறது.

''அரசியல் சட்டத்தை எதிர்த்து எரித்தவர்கள் எப்படி அதே அரசியல் சட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம் செய்யலாம்? இது சரணாகதியாகாதா? இப்படிச் செய்தால் தியாகராசா, அருளம்பலம் ஆகியோருக்கும், தமிழர் கூட்டணியினருக்கும் என்ன வித்தியாசம்? அவர்களைத் துரோகிகள் என்று கூறிவிட்டு இவர்கள் துரோகிகள் ஆகலாமா?''

—இதுவே இன்று எழுப்பப்படுகின்ற ஒரே கேள்வியாகும்!

இக்கேள்விகள் அரசியல் தெளிவற்ற சாதாரண பாமர மக்களின் மனத்தை குழப்பிவிடுவதற்காக எழுப்பிவிடப்பட்டிருக்கின்ற கேள்விகளாகும். அரசியல் வரலாறுதெரிந்தோர் எவரும் இக்கேள்விகளால் குழப்பமடையமாட்டார்கள்!

அயரிஷ் சுதந்திரப் போராட்டத்தின்போது, அயரிஷ் விடுதலை வீரர்கள் அயர்லாந்தை பிரிட்டிஷ் அரசனின் ஆதிக்கத்தில் வைத்திருக்கும் அரசியல் அமைப்பை கடுமையாக எதிர்த்தார்கள். பிரிட்டிஷ் அரசனுக்கு எதிராக வெளியே ஆயுதம் தாங்கிப் போரிட்டார்கள்: ஆனாலும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்குள்ளும் சென்று அரசனுக்கு விசுவாசம் தெரிவித்துவிட்டு விசுவாசம் செய்த அதே வாயால் அடுத்த கணமே அரசனுக்கு எதிராக அயரிஷ் விடுதலைப் போரை ஆதரித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முழங்கினார்கள்.

அயரிஷ் விடுதலை வீரர்கள் காட்டிய முன்மாதிரியைத்தான் தமிழர் கூட்டணி பா. உ.க்கள் தேசியப் பேரவையில் பின்பற்றப் போகிறார்கள்!

இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவு இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாகப் பிரகடனப்படுத்துகிறது. இந்தியை மூர்த்தண்யமாக எதிர்த்துவரும் திராவிட முன்னேற்றக்கழகம், இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவை—அதாவது இந்தியை ஆட்சிமொழியெனப் பிரகடனப்படுத்தும் பிரிவை — பகிரங்கமாக தீவைத்துக்கொழுத்தியது — சுட்டுப்பொசுக்கியது. பேரறிஞர் அண்ணாவும் முதல்வர் கருணாநிதியும் தி. மு. க. தலைவர்களும் இந்திய அரசியல் சட்டத்துக்கு பகிரங்கமாகத் தீயிட்டுக் கொழுத்தி சிறைத் தண்டனையும் அனுபவித்தார்கள்.

ஆனால் அதே இந்திய அரசியல் சட்டத்துக்கு—இந்தியை ஆட்சிமொழியெனப் பிரகடனப்படுத்தியுள்ள அரசியல் சட்டத்துக்கு—எந்தச் சட்டத்துக்கு தீயிட்டுக் கொழுத்தினார்களோ அதே சட்டத்துக்கு விசுவாசம் செய்து பாராளுமன்றத்துக்கு செல்லவும் அவர்கள் தயங்கியதில்லை. இந்திய அரசியல் சட்டத்துக்கு விசுவாசப்பிரமாணம் செய்ததால், அவர்கள் இந்தியை ஏற்றுக்கொண்டார்கள் என்பது அர்த்தமுமல்ல! இன்றும் அவர்கள் இந்தியை கடுமையாக எதிர்க்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றிய அதே முறையைத்தான் தேசியப் பேரவைக்கு செல்லும் தமிழர் கூட்டணியினரும் பின்பற்றப் போகிறார்கள்!

ஏன் வேறு நாடுகளின் உதாரணத்துக்கு செல்ல வேண்டும்? சோல்பரி அரசியல் சட்டத்தை தமிழரசுக் கட்சி ஆரம்பம் முதற்கொண்டே கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறது. தீயிட்டுக் கொழுத்தி தமது எதிர்ப்பை உக்கிரமாகக் காட்டியுமிருக்கிறது. ஆனால் அதே சோல்பரி அரசியல் சட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம்செய்து தானே கடந்த 25 ஆண்டுகளாக நமது பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் வீற்றிருந்தார்கள்? சுயாட்சிக் கழகத் தலைவராக இன்று இருக்கும் நவரத்தினமும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் சோல்பரி அரசியல் சட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம் செய்துதானே வீற்றிருந்தார்? இதனால் நவரத்தினமோ, தமிழரசுக் கட்சியினரோ சோல்பரி அரசியல் சட்டத்தை ஏற்றுவிட்டனர்; சரணாகதியடைந்துவிட்டனர் என்று யாராவது கூறமுடியுமா? கூறியதுண்டா?

இன்றைய சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது பின்பற்றிய அதே வழியைத்தான் தேசிய சபையிலும் தமிழர் கூட்டணி பா. உ.க்கள் இப்போது பின்பற்றப்போகிறார்கள்!

எனவே தேசியசபைக்கு சென்று விசுவாசப்பிரமாணம் செய்துகொள்வது வெறும் அரசியல் சம்பிரதாயமே தவிர சரணாகதியாகாது. அரசியல் சட்டத்துக்கு விசுவாசப்பிரமாணம் செய்த பின்னர், அதை எதிர்க்கும் உரிமையை நாம் இழந்துவிடுவோமானால், அதற்குப் பெயர்தான் சரணாகதியாகும். அரசியல் சட்டத்தை எதிர்த்து போராடி அதை ஒழித்துக்கட்டும் உரிமையை தமிழர் கூட்டணி பா. உ.க்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்கவுமில்லை—சரணாகதியடையவுமில்லை. அரசியல் சட்டத்தை எதிர்க்கும் ஒரே நோக்குடனேயே தேசியப் பேரவைக்கும் செல்லவிருக்கிறார்கள்.

தேசியப் பேரவைக்கு செல்வதும் அரசியல் சட்டத்துக்கு ஆதரவாக கையெழுத்திடுவதும் ஒருதன்மையானதல்ல. தியாகராசா, அருளம்பலம் மாட்டின் போன்றவர்கள்புதிய அரசியல் சட்டத்தை தாம்ஏற்றுக் கொண்டதாக அதில் கையொப்பமிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் புதிய அரசியல் சட்டத்தில் — தமிழினத்தின் அடிமைச் சாசனத்தில் எக்காலத்தும் கையொப்பமிட மாட்டார்கள்!

தமிழர் கூட்டணியினர் தேசியப் பேரவைக்கு செல்ல முடிவெடுத்ததை வைத்துக்கொண்டு — அரசியல் சட்டத்துக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டு படுதுரோகமிழைத்த தமிழ் பிரதிநிதிகளின் "கழுத்தறுப்பு செயலுக்கு நியாயம் காண நாளேடுகள் முயல்வது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகவே முடியும்!

தேசியப் பேரவைக்கு செல்லும் 13 பா.உ.க்களும் தேசிய சபையை எவ்வளவு தூரம் ஈழத்தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்குரலை எடுத்துக்கூறும் மேடையாகப் பயன்படுத்தமுடியுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்த முன்வரவேண்டும். தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டமும் ஒற்றுமையுமே ... களாகக் கொண்டு புதிய தெம்புடன் புதிய உற்சாகத்துடன் செயற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

# தமிழர் கூட்டணி முடிவுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபையே தன்னை அரசியல் நிர்ணய சபையாக்கிக் கொண்டது. அச்சபை இந்நாட்டு மக்களின் சரியான பிரதிபலிப்பாக எவ்வகையிலும் கருதமுடியாதது.

அச்சபையில் 35 லட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. அரசாங்கத்தில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்பேசும் அமைச்சர் ஒருவர்தானும் இடம்பெறவில்லை. பிரதிநிதித்துவம் வாய்ந்த மாநாடுகள் மூலம் எடுத்துக்கூறப்பட்ட தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தும் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டது. உண்மையில் இந்நாட்டுப் பொது மக்களே இவ்வரசியல் அமைப்பைத் தயாரிப்பதில் எவ்வித பங்கும்பெற முடியவில்லை. பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ஒற்றுமை காணுதல் என்ற எமது பாரம்பரிய பண்பாட்டை ஆட்சியிலிருப்போர் அணுவளவும் அனுஷ்டிப்பவராயில்லை. தேசீய கருத்தொற்றுமையை ஏற்படுத்த அவர்கள் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. அரசியல் அமைப்பின் தயாரிப்பு பூர்த்தியாக்கப்பட்ட பின்பே அவசரகாலச் சட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட பத்திரிகைத் தணிக்கையைத் தளர்த்தியதன் மூலம் அத்திட்டத் தயாரிப்பில் பங்குபற்றுவது முற்றாகத் தடுக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகள் மூலமும் யாழ்நகர மண்டபத்தில் 15-9-70 இலும் அதன்பின் இருதடவையும் கூடிய அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டினாலும், 7-2-71ல் வல்வெட்டித் துறையில் கூடிய சகல தமிழ்க்கட்சிகளினாலும் உருவாக்கிச் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன: இதைத்தொடர்ந்து தமிழ் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறினர்.

நாடாளுமன்றத்திலுள்ள 19 தமிழ் உறுப்பினர்களில் நால்வரே புதிய அரசியல் அமைப்பை ஆதரித்து 22-5-72ல் வாக்களித்தனர். இந்த 4 உறுப்பினர்களில் 3 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கட்சிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதன் மூலம் தம் பிரதிநிதித்துவத் தன்மையை இழந்துவிட்டனர். நாலாவது உறுப்பினர் சுயேச்சை வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தவர். தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் இவ்வரசியல் அமைப்பைத் தமது அமைப்பாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எனவே

### தீர்மானம் 1

தமிழ் மக்களுடைய கீழ்காணும் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் அரசியல் அமைப்புத் திருத்தப்பட வேண்டுமென்று தமிழர் கூட்டணி கோருகிறது.

(அ) அரசியல் அமைப்பில் சிங்களத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

(ஆ) இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கு பூரண குடியுரிமைக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். பிரஜைகளில் பிரிவுகளோ, அவற்றின் அடிப்படையில் பாரபட்சம் பாராட்டுதலோ இருத்தலாகாது. எவருடைய குடியுரிமையையும் பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இருத்தல் ஆகாது.

(இ) அரசு மதச் சார்பற்றதாக இருக்கும் அதே நேரத்தில் எல்லா மதங்களுக்கும் சம பாதுகாப்பு அளித்தல் வேண்டும்.

(ஈ) தனிமனிதருக்கிடையிலும் இன கலாசாரக் குழுக்களுக்கிடையிலும் சமத்துவத்திற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய, நீதிமன்றம் மூலம் நிலைநாட்டப்படக் கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும்.

(உ) சாதியையும் தீண்டாமையையும் ஒழிக்க வேண்டுமென்பது அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும்.

(ஊ) அதிகாரம் அரசின் உடமையாக இல்லாது மக்கள் உடமையாக இருக்கக் கூடியதாக மக்கள் பங்கு கொள்ளும் சனநாயக ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஓர் அமைப்பிலேயே சனநாயக சமசமுதாயம் சா...கும் என்ற கொ...கை அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1972ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ம் திகதியுடன் பூர்த்தியாகும் மூன்று மாத காலத்திற்குள் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை உள்ளடக்கக் கூடிய வகையில் அரசியல் அமைப்பைத் திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறுமானால் தமிழ் இனத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் இனத்தின் அரசியல் பொருளாதார, சமூக கலாச்சார வாழ்வை அமைத்துக் கொள்வதற்கும் சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவதென்றும் தமிழர் கூட்டணி தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 2

அரசியல் அமைப்பைத் திருத்தச் செய்வதற்கும் தேசியப் பேரவையின் உள்ளும் வெளியிலும் தமிழ் மக்களின் உரிமைப்போரை வழி நடத்துவதற்குமான உறுதியோடு தேசியப் பேரவைக்குச் செல்லுமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரைத் தமிழர் கூட்டணி பணிக்கிறது.

### தீர்மானம் 3

இந்நாட்டின் மற்றைய பகுதிகளிலும் பார்க்க அமைதி நிலவும் பிரதேசமாக இருப்பவை வடக்கு, கிழக்கு மாகாணங்களே. பொதுவாகத் தமிழ் மக்களும் குறிப்பாக தமிழர் கூட்டணியினரும் தமது போராட்டங்களில் சாத்வீக வழிகளையே கைக்கொள்ள உறுதி பூண்டிருக்கின்றனர். இப்பின்னணியில் அங்கொன்று இங்கொன்றாக நடந்த சில பலாத்காரச்சம்பவங்களை அரசாங்கமும் பத்திரிகைகள் சிலவும் பெரிது படுத்தி அரசியல் இயக்கத்தின் ஓர் அங்கமென்று காட்டி, இப்பொய்யான காரணத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுடைய பேச்சுரிமையைப் பறித்து அமைதியான ஆர்ப்பாட்டங்களையும் தடுத்திருப்பதையும், நிரபராதியான இளைஞர்கள் பலரைக் காரணமின்றிக் கைது செய்திருப்பதையும் இக்கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் பொதுக்கூட்டங்களுக்கும் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் தடை ஜூலை மாதம் 22ந் திகதிக்கிடையில் நீக்கப்படாவிட்டால் அத்தினத்தில் பூரண துக்கதினம்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தலைவர்களின் சிந்தனைக்கு...!

'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் கடமை என்ன?' என்று வெளிவந்த தமிழ் நெறியின் ஆசிரியத் தலையங்கத்தைச் சுதந்திரன்மூலமாகவாசித்ததும் தமிழ் இலங்கை மக்கள் எல்லையில்லா மகிழ்வெய்தி இருப்பர் என்பது திண்ணம். எமதுரிமைப் போராட்டத்தின் இறுதிக்கட்டம் அண்மி வந்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தே தமிழ்நெறி எமக்காதரவாக இரத்த பாச உரிமையை வெளிப் படுத்தித் தமிழ் நாட்டு மக்களை விழித்தெழச் செய்ததை தமிழ் இலங்கை மக்கள் என்றுமே மறந்துவிட மாட்டார்கள். தமிழ் நெறி எடுத்துக்காட்டிய இரத்த பாச உணர்ச்சி தமிழ் இலங்கை மக்களிடையே கடந்துபோன சரித்திர வரலாறுகளில் காண முடியாமற் போனதே தற்போதைய சோகவரலாற்றின் முடிவாகும்.

### கியூபெக் உதாரணம்

வங்கத்தை, சைப்ரசை, வட அயர்லாந்தை எடுத்துக் காட்டிய தமிழ் நெறி, கனடாவின் கியுபெக்கையும் பாகிஸ்தானின் பாட்டாணியர் மாகாணத்தையும் தவற விட்டுவிட்டது. கனடாவின் கியுபெக் மாகாணத்துப் பிரெஞ்சு பேசும் மக்களுக்காக பிரான்சின் தன்னேரிலாத் தலைவராக இருந்த யெனறல் டிகால் இரத்த பாச உணர்ச்சியை வெளிப் படுத்தியதினுலே அவர்களின் உரிமை அங்கு கொடுக்கப் பட்டது.

பாகிஸ்தானின் பாட்டாணியர் மாகாணத்தின் சுதந்திரத்துக்காக அன்று தொட்டு இன்று வரை ஆப்கானிஸ்தான் குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. இந்நாடுகளெல்லாம் உலக யுத்தம் வருமே என்று பீதி கொண்டு வெலவெலத்து நடு நடுங்கவில்லை. ஆனுல் எமது தலைவர்கள் தமிழ் நாட்டில் போய் இறங்கியதும் உலகயுத்த பீதி கொண்டு வெல வெலத்து, நடு நடுங்கி உடனே அவர்களைத் திருப்பி அனுப்புங்கள் என்று பொது மேடையில் ஒருவர் கூச்சலிட்டதைத் தமிழ் இலங்கை மக்கள் என்றுமே மறந்து விட மாட்டார்கள்.

### கேவலம் இது

அதுவும் இரு உலக மகா யுத்தங்களில் பிரித்தானிய சாம்ராச்சியத்தைக் காத்தற்பொருட்டுத் தமதருமை உயிர்களைத் துச்சமென மதித்து வீரப் போர் புரிந்து புகழ் எய்திய- இரண்டாவது உலகயுத்தத்தின்போது பிரான்சிய எல்லையில் வைத்து அரைமணி நேரத்தில் நாசி யெர்மனியரின் நாற்பத்தி எட்டுப் பயங்கர டாங்கிகளை உடைத்தெறிந்து யெர்மனியரைப் புற

**வளவன் கூடலான்**

முதுகிட்டோடச் செய்து இரண்டாவது உலகயுத்த கதாநாயகன் வின்ஸ்டன் சேர்ச்சிலிடம் பாராட்டைப் பெற்ற- வங்கத்தில் பிரவேசித்து டாக்காவின் நுழைவாயில்களான ஜெய்சூர், குல்லாணு முதலிய இடங்களை மின் வேகத்தில் கைப்பற்றிப் பன்னிரண்டே நாட்களில இந்தியப் படைகளிடம் பாகிஸ்தான் கொலைஞர்களைச் சரணடையச் செய்வித்த மதுரைப் படை வீரர்கள் முன்பு கேவலம் ஒருவர் வெல வெலத்து நடு நடுங்குவதென்ருல் அதனிலும் கேவலம் தமிழ் மக்களுக்குப் பிறிதொன்றில்லை.

இன்னும், 'இந்திராவுக்கு இலங்கையின் நட்பு முக்கியம். அங்குள்ள தமிழர்களின் உரிமை முக்கியமில்லையா?' என்ற தமிழ் நெறியின் கேள்வியை எடுத்துக் காட்டி உலகின் ஒடுக்கப் பட்ட மக்களின் தலைவி என்று போற்றப்படும் அன்னையாம் பாரதப் பிரதமர் அவர்களுக்கும், பாரத மக்களுக்கும் நாமும் சில விடயங்களை எடுத்தியம்ப வேண்டியவர்களாய் இருக்கின்ருேம்.

### நட்பை நாடியதில்லை

தற்போது ஸ்ரீலங்கா என்று தனது இயற்பெயரை மாற்றி இருக்கும் இலங்கை அரசாங்கம் பாரதத்தின் நட்பை என்றுமே வேண்டி நின்றதில்லை. அவர்களின் முழு நோக்கமும் இலங்கையின் சுபீட்சத்திற்காக அல்லும், பகலும் பாடுபட்டுத் தமது இரத்தம், வியர்வை முதலியவைகளைச் சிந்திய மலைநாட்டுத் தமிழ் மக்களை நாடு கடத்துவதற்கும்; தமிழ் இலங்கை மக்களை நசுக்கி, ஒடுக்கி அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்களவரைத் திட்டமிட்டுக் குடியேற்றி இலங்கை முழுவதும் சிங்கள பெளத்த நாடு என்று உலகிற்குக் காட்டவும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எடுத்த

திய வெறியர் நசுக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த மூலகாரணமாய் இருந்தது. அத்தோடு அன்று தமிழ் நாட்டுத் தலைவர்களும் தமிழ் இலங்கை மேல் கருணைகாட்ட முன்வரவில்லை.

இந்தியாவுக்கெதிராக பாகிஸ்தானும், செஞ்சீனுவும் உருவாக்கிய பகைமை உணர்ச்சியை இலங்கை தனது சிங்கள பெளத்த வகுப்புவாத நடவடிக்கைகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதை இந்தியத் தலைவர்கள் நட்பு நடவடிக்கைகள் என்று கொள்வார்களேயானுல் அது அவர்களின் அறியாமையையே குறிக்கும்.

### நாடுகடத்த முயற்சி

மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை முதலியவைகளைப் பறித்தெடுத்ததின் பிற்பாடு, ஆசியஜோதியாம் நேருஜியுடன் அவர்களை நாடு கடத்துவதற்கு எவ்வளவு பேச்சுவார்த்தைகள் நடந்தன என்பதை யாம் மறந்துவிட முடியாது. நேருஜியிடம் சிங்கள அரசின் ஜம்பம் பலிக்காது போகவே இந்தியாவுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் நோக்கோடு பாகிஸ்தானிடம் ஓடோடிச் சென்று ஐம்பதினுயிரம் பாகிஸ்தான் வம்சாவளிப் பிரசைகளை பாகிஸ்

கடவுள் கிருபையால் பாகிஸ்தான் காப்பாற்றப்பட்டுவிட்டது என்று இலங்கை நிருபர்களிடம் கூறிக்கொண்டிருந்தார்.

அதே நேரத்தில் வங்கத்தில் பாகிஸ்தானி வெறிபிடித்த படைகளால் கொலை கொள்ளை, கற்பழிப்பு முதலிய இன்னேரன்ன கொடுமைகளெல்லாம் நிகழ்ந்து கொண்டிருந்ததை எவரும் மறந்துவிடக் கூடாது. அக்காலம் எமது பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இலங்கை அரசாங்கத்தை விழித்துப் பாகிஸ்தான் மிலேச்சர்களின் விமானங்கள் இலங்கை வழியாகச் செல்வதைத் தடை செய்யும்படி எவ்வளவோ இரந்துவேண்டினுர்கள். ஆனுல் ஏற்கவில்லை இலங்கை அரசாங்கம்.

### இலங்கைக்கூடாக யுத்த விமானங்கள்

வங்கத்தின் மக்கள் தலைவர்கள் கேட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து இந்தியத் தலைவர்கள் இரந்து கேட்டார்கள். ஏறியதா? இலங்கை அரசாங்கத்தின் செவிகளில்? பிற்பாடு யுத்தம் தவிர்க்க முடியாதது; அதனுல் இலங்கைக்கும் ஆபத்து நேரலாம் என்று உணர்ந்தே கடைசி நேரத்தில் பாகிஸ்தான் விமானங்கள் இலங்கைக்கு மேலால் பறப்பதை தடைசெய்தார்கள். ஆரம்பத்திலேயே தடை செய்திருந்தால் எவ்வளவோ கொலை, கொள்ளை கற்பழிப்புகளைத் தடைசெய்திருக்கலாம். இதை நட்புறவு நடவடிக்கைகள் என்று கொள்ளமுடியுமா?

## இலங்கை அரசின் நடவடிக்கைகள் நட்புறவை வளர்க்கின்றனவா?

நடவடிக்கைகள் உலகப் பிரசித்தமானவை.

இந்த உலகப் பிரசித்த இராசதந்திர சாணக்கிய நடவடிக்கைகளை பாரதத் தலைவர்களும், மக்களும் உணர முடியாமற் போனதை நினைக்க அழுவதா அன்றிச் சிரிப்பதா என்றிருக்கிறது. இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம் இந்தியாவின் நட்பை எந்தக் காலத்தில் விஸ்வாசமாக வேண்டி நின்றது என்று இந்தியத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிருேம்.

### நேருவின் கொள்கைகளே காரணம்

ஆசிய ஜோதியாம் பண்டிதர் லாலின் சமாதானக் கொள்கைகளே சிங்கள பவுத்த வெறி இலங்கையில் வேருன்றக் காரணமாக இருந்தது. அவரின் கொள்கைகளால் பாரதம் இலங்கைக் கெதிராக எவ்வித இராசதந்திர நடவடிக்கைகளும் எடுக்க முன்வரமாட்டாது என்ற துணிவே இலங்கையின் முதல் பிரதமராக இருந்த சிங்கள பெளத்த வெறி பிடித்த டி. எஸ். சேனநாயக்கா அவர்களை என்றும் குடியுரிமை, வாக்குரிமையோடு வாழ்ந்த மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரின் உரிமைகளைப் பறித்தெடுத்து அவர்களை அனைதகளாக்கத் தூண்டியது. இன்னும் வட பாரத மக்கள் தலைவர்களிடம் குடிகொண்டிருந்த இந்தி வெறியும், தமிழ் நாட்டு மக்கள் மேல் அவர்கள் [illegible] இலங்கை மக்களை சிங்கள ஏகாதிபத்

தானியர் என்று ஒப்பந்தம் செய்து கொண்டது.

பின்பு பாகிஸ்தானுடனும் செஞ்சீனுவுடனும் நடுவு நிலைப் போர்வையின் கீழ் நின்று கொண்டு ஒத்து இயங்கிய இந்தியாவுக்கு எதிராக நெருக்கடிகளை உருவாக்கியது. இந்த நெருக்கடிகளின் விளைவாக உருவானதே சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தத்தின் கீழ் உருவானதே ஐந்து லட்சம் மலைநாட்டுத் தமிழ் மக்களைப் படிப்படியாக நாடு கடத்தும் சோக வரலாறுகும். இந்தியாவின் குடைக் கீழ் இருக்கும் சிறிய நாடாகிய இலங்கை இந்தியாவுக்குக் கொடுத்த நெருக்கடிகளை நட்புறவு நடவடிக்கைகள் என்று கொள்ள முடியுமா?

### யகியாகான் பக்கம் சிங்கள அரசு!

இன்னும் வங்கத்தின் சோக வரலாற்றைஎடுத்துக் கொண்டால் இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான் வெறியன் யகியாகானுடன் சேர்ந்து இயங்கியதே! அங்கு முப்பது இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும்; இரண்டு இலட்சம் பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டுக் கற்பழிக்கப்பட்டதும் தெரிந்ததே. வங்க பந்துவுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றனர் யகியாகானும் பூட்டோவும். பேச்சுவார்த்தை முறிந்தவுடன் பூட்டோ அவர்கள் பாகிஸ்தானுக்குச்செல்லும் வழியில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கி இருந்தார். அப்பொழுது

வங்கத்தின் சோக வரலாற்றைத் தொடர்ந்து அம்மக்களின் துயர் துடைக்கும் நோக்கோடு உலகிலேயே ஒழுக்கசீலர்களும் தமது கடமையே பெரிதெனக் கொண்டவர்களும் மாபெரும் தியாக வீர புருஷர்களுமாகிய பாரதப் படையணி வீரர்கள் வங்கத்தில் மின் வேகத்தில் பிரவேசித்ததும், 'இந்தியா வங்கத்தினின்றும் வெளியேற வேண்டுமென்று ஐக்கியநாடுகள் சபையில் தீர்மானம் கொண்டுசென்ற இலங்கையின் சின்னத்தனத்தை நட்புறவு நடவடிக்கை என்று எப்படிக் கொள்ள முடியும்?

### நன்றி மறந்தது இலங்கை

மேலும் இலங்கையில் பயங்கரவாதிகளின் இயக்கம் வேகமாகச் செயல்பட்ட போது இந்தியா தமது கடற்படை, கெலிக்கொப்றர் விமான அணி, கூர்க்கப் படை வீரர்களாகியவற்றை இலங்கை அரசுக்கு உதவியாக அனுப்பி வைத்தது. இந்திய கெலிக்கொப்றர் விமானங்கள் இலங்கை இராணுவத்திற்கு உதவியாகப் பயங்கரக்காடுகளின் மேலாகப் பறந்து பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இலக்குகள் மீதெல்லாம் குண்டுகளை வீசியும் யந்திர துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் குறுகிய காலத்தில் பயங்கரவாதிகளில் பெரும் பகுதியினரைச் சரணடையும்படி செய்தன. இதன் காரணமாக இந்திய அரசுக்கு ஒன்பது கோடி ரூபா செலவானதை யாரும் மறந்துவிட முடி

(9ம் பக்கம் பார்க்க)

## அணிசெய்வோம்

—கலாவல்லி

ஊருக்குள் இன்ருேர் கிரகணம் வந்தது
ஊமை வெயில் புழுக்கம் இதுநாள்!
பாருக் குழைத்துப் பலபுக ழீட்டிய
பால வொளிக்கதிர்ச் சூரியர் நாம்!
தேருக் கழகிய ஆணியிருப்பினும்
சேர்ந்திழுப் பாரிலையேல் நகரா!
ஆருக்கு வேண்டும் அடிமைக் குடியர(சு)?
ஆக்கி, யணி செய்து, ஆள்வோமடா!

நாயின் எசமானர் வீட்டில் நடக்கிற
நல்ல திருமண வைபவத்தை
நாயிடம் கேட்டு, நலங்குறித்து, மணம்
நாயகன் செய்யா நிலையது போல்
தாயகம் காணும் குடியரசு இது!
தக்கவர் நாங்கள் தலைவணங்கோம்.
சேயொடும் மாள்வோம்! சிவத்தழ லாவோம்!
செய்வன செய்து சிரம் நிமிர்வோம்!

ஈழத் தமிழருக் கிங்கு நிகழ்வது
ஊழனம், நாய்களுக்கும் நிகழா!
வாழும் பரம்பரை வாய்ப்புகள் பெற்றவர்
வந்தவரின் அடி மண்டியிடோம்!
நீளம் குறைந்த விலங்கில் தளைப்படும்
நீசர் குடியரசைப் பணியோம்!
ஆள நினைப்போர்க் கடிபணியோம்; அவர்
அன்னை கருவில் பிழைத்தவர் காண்!

இன்று குடியர சென்ருெரு பித்தளை
யில் அணி பூட்டி இதம்பரவும்
மன்றம் பிழைத்து 'மமதையில்' வீழ்ந்தது!
வாழ்வைக் கெடுத்தமி ழன் வருவான்.
ஒன்றுக்கும் அஞ்சேல் ஒளிதிகழ் ஈழமே
உன்புதல்வர் அணி ஓங்குதடி!
சென்றவை செல்க, சிறுமையர் வீழ்க!
செல்வர் தளையறுப் பாரடியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

நூல்: ,இன்ப வானில் (கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர்: கவிஞர் ச: வே. பஞ்சாட்சரம்.

விலை: ரூபா 1-50.

அன்பு, தமிழினத்தின் முது சொத்து. ''அன்பகத்தில்லா வுயிர் வாழ்க்கை வன்பாற்கண்; வற்றல் மரந் தளிர்த் தற்று'' என்றார் வள்ளுவர். இந்த அன்பே அமுதத் தமிழ்மொழியின் அடிநாதமும் ஆகும். 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' தமிழர் அகவாழ்வாகும். முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை ஒழுக்க நெறிக்கண் பாலை தருவது பிரிவு. பாலையின் உரிப்பொருள் அது. இது பிரிவெனப் பெயர் பெறினும் அதுவும் அன்பொடு புணர்ந்த ஐந்திணையுள் ஒன்றே. இந்த அன்பையே அடிப்படையாகக் கொண்டு அன்பின் அறுவடைக் கவிதைகள் முப்பத்தைந்தைக்கொண்ட ''இன்ப வானில் என்னும் அகத்துறைக் கவிதை நூலை ஆக்கியுள்ளார் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள்.

ஈழத் தமிழ்ச் சமுதாயத்திலே நிலவுகின்ற பல்வேறு தொழில் வழிச் சமூகங்களிடையே ஒன்றிய பரிசுத்த மனங்கொண்ட கணவன், மனைவி, காதலன், காதலியரின் பிரிவின்போது உண்டாகும், இலட்சிய அன்புப் பரவச நிலைகளை மிகவும் எளிமையான நடையில் உருக்கமாக இந்நூலில் வர்ணிக்கின்றார், கவிஞர். காலத்துக்கேற்ற கருத்துள்ள கவிதைகள் பழைய சங்க இலக்கிய மரபைப் புதிய பாணியில் அமைத்துள்ளார். பாடல்களைப் படிக்க உண்டாகும் கருத்தினிமை, கலித்தொகையையும், நற்றிணையையும் அகநானூற்றையும் நினைவுபடுத்துகின்றது.

தோட்டத்தில் நீர் இறைக்கச் சென்ற காதலனை அதாவது, 'கூட்டிறைப்பால் அப்பாவின் கூட்டாளியாகிவர்;' பாட்டிறைப்பால் என்னுள்ளம் பாகாக்கிச் சென்றவரை—எண்ணி ஏங்கும் காதலியின் நினைவைக் கவிஞர் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

''தோட்டவெளித்
துலாவிருந்து
துண்டுதுண்டாய்
இரவினிலே
பாட்டொன்று கேட்கிறது
பாய்புலம்பத்
தவிக்கின்றேன்

தூக்கத்தால் என் நினைவால்
துலாச்சுறுக்கி வீழாமல்
காக்கின்ற அப்பாட்டுக்
களியின்னக் கேட்கிறது.''

மேலும், லொறிச்சாரதியின் மனைவி தன் கணவனை எண்ணி,

''காட்டு வழியில்
கிடங்குமுடங்கும்
ஓட்டம் தடைசெயின்—
கொடிய
காட்டு யானை
புலிகள் அவருக்
கின்னல் புரியுமே!
ஓட்டும் போது
தனைமறந்து
கண்ணயர்ந்திடின்—
கண்டி
நாட்டு வீதிப்
பள்ளந்தன்னில்
லொறியும் பாயுமே!''

என்று ஏங்குகின்றாள். அவர்களின் அன்பின் பேரின்பந்தான் எவ்வளவு?

''ஏங்குவதென்றால்
இரண்டு நெஞ்சும்
ஏங்குகின்றோமே—இன்பின்
ஓங்குவதென்றால்
ஒருமை எய்தி
ஓங்குகின்றோமே
தூங்குவதென்றால்
இரண்டு நெஞ்சும்
தூங்குகின்றோமே
—உயிர்கள்
நீங்குவதென்றால்
ஒன்றுசேர்ந்தே
நீங்கவும் வேண்டும்!''

என்று அவள் கூறுகின்றாள். என்னே! ஒற்றுமை.

சோக மயமான பிரிவில் மட்டுமன்றி, காதலின்பத்திலும் கவிஞரிடம் கவிதை பிறக்கின்றது. கிடுகு பின்னும் பெண்ணை,

''தென்னஞ் சோலை
மணலில் குந்தி
தின்னும் நோக்கில்
குறும்பைச் சிந்தி
என்னை வண்டி மீதில் கண்டு
கிடுகு பின்னுவாள்—
பொன்னி
என்னைக் கண்ணில்
பின்னிப் பின்னிக்
கிடுகும் பின்னுவாள்.''

எனக் காட்டுகின்றார்.

இன்னும், ''அத்தான்! அத்தான்! நீங்கள்; முத்தாய்க் கவிதை பாடும்முறையைச் சொல்லுவீரோ?'' எனக் கேட்ட அவளிடம்.

'எதுகை' வேண்டும் எதுகை!
எதுகை? இங்கே நீட்டு!

இணைய வேண்டும்
இதுபோல்!—

என அவன் சொல்ல, அதனைக் கண்ட பாட்டி, 'என்ன 'மோனை' என்ன? என்னைக் கூப்பிட்டாயோ? என்ன வேண்டும் சொல்லேன் எனக்கூற— அவன் மெல்ல

மோனை வேண்டும்! மோனை!
தேனைப் பாட்டில் வார்க்க
தேவை இந்த 'மோனை'!

என்கிறான் வேடிக்கையாக. ஏக்கக் கவிதைகளிடையே இவ்வாறு நகைச்சுவைகளையும் கவிஞர் சேர்த்துள்ளார்.

இவ்வாறு உள்ளத்து உறுத்துகின்ற உணர்ச்சிகளை எடுத்தெடுத்து உயர்வான கவிதைகளாய் 'இன்ப வானில்' வடித்துள்ளார் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள். இவருடைய பாடல்களின் ஓசையின்பம் நாட்டுப் பாடலின் நல்லோசையோ அல்லது கவிஞரின் சொந்த ஊராகிய இணுவில் பகுதியில் எழுகின்ற நாதஸ்வர ஓசையோ என ஐயப்படையச் செய்கிறது. இவர் பாடலில் பளிச்சிடும் மண் வாசனை தனி வாசனை. ''தூய சிந்தனை, துடிக்கும் உணர்ச்சி, துள்ளல் நடை அளவான, அழகான, அற்புதமான சொற் பிரயோகம் இவருடைய கவிதை'' என்கின்றார், 'சிற்பி' அவர்கள். அது முற்றிலும் சரியே.

''எழிலி'' என்னும் கவிதைக் காவியத்தால் சாகித்திய மண்டலப்பரிசு பெற்று, இன்பம் நிறைந்த ஒரு 'தூண்டிலை'யைத் தந்து, 'சின்னஞ் சிறு கதை' அளித்த அன்பர் திரு. ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின் இந்த அன்பு அறுவடைக் கவிதையாகிய ''இன்பவானில்'' அவரின் கவிதை இலக்கிய வயலில் ஒரு அமோக விளைச்சலைத் தந்துள்ளது என்றால் மிகையாகாது.

—பண்டிதர் க.சிவரத்தினம்

# புனித சவேரியார் கல்லூரியில் உயர் கல்விக்குத் தடையா?

## மன்னார் பொதுமக்கள் குமுறல்!

இம்மாதம் 2ந் திகதி மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் க. பொ. த. (உயர்தர) விஞ்ஞான வகுப்பு மிகவும் மகிழ்ச்சிகரமாக ஆரம்பிக்கப்பட்டது. வசதியற்ற அனேகபெற்றோர்கள் தங்கள் ஊரிலும் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதினால் தங்கள் பிள்ளைகள் அனைவரும் உயர்கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறலாமென்று சம்பந்தப்பட்ட கல்வியதிகாரிகள் மட்டில் நன்றியுணர்ச்சியுடையவர்களாக விளங்கினார்கள்.

இதன் காரணமாக அண்மையில் மன்னார்க் கல்விக் கந்தோருக்கும், கல்லூரிகளுக்கும் சமூகமளித்திருந்த மேலதிக நிரந்தர கல்விக் காரியதரிசி திரு. சுமதிபால அவர்கள் கல்வி அதிகாரிகள் கல்லூரி முதல்வர்கள், மாணவ மாணவிகள் உள்ளத்தில் நன்றியுணர்ச்சி மேலோங்க, அகமகிழ்வுடன் வரவேற்று உபசரித்தார்கள்.

ஆனால் அவ்வுத்தியோகத்தர் கல்வி அதிகாரி மூலமாக கல்லூரி முதல்வருக்கும் மாணவர்களுக்கும் அதிர்ச்சிதரும் செய்தியொன்றை சொல்லிச் சென்றார். அதாவது மன்னார் பட்டினத்திலுள்ள, உயர்கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் அனைவரையும் 6 கல்தொலைவுக்கு அப்பாலுள்ள எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்திற்கு சென்று படிக்கும் படியும் புனித சவேரியார் கல்லூரியில் உயர்தர வகுப்பு தொடர்ந்து நடாத்தக் கூடாதென்றும், உத்தர விட்டதேயாகும்.

இதனைக் கேள்வியுற்ற மன்னார் வாழ் மக்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளனர்; மாணவர்கள் மனம்சேர்ந்து கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லையேயென்று அங்கலாய்க்கின்றனர். இது சம்பந்தமாக கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகக்குழு உடனடியாகக் கூட்டப்பட்டு மேற்படி விடயம் பற்றி மிகவும் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. கூட்டத்திற்கு பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் அழைப்பின்பேரில் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஏ. அழகக்கோன் அவர்களும் சமுகமளித்திருந்தார்.

இக்கூட்டத்தில் க. பொ. த. உயர்தரவகுப்பை புனித சவேரியார் கல்லூரியிலிருந்து அகற்றும்படியான உத்தரவுக்கெதிராகப் பெற்றார் ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு தீர்மானமொன்றைத் தயாரித்து மன்னார் பாராளுமன்றப் பிரதிநிதியின் மூலம் கௌரவ கல்வி மந்திரிக்கும் சம்பந்தப்பட்ட கல்வி ஆணையாளர், அதிகாரிகளுக்கும் கொடுத்தனுப்பியுள்ளது. மேலும் இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஏ. அழகக்கோனுக்கும் கல்வி மேலதிகாரிகள், மந்திரிக்குமிடையில் தீர்க்கமான பேச்சுவார்த்தை நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியத் தலைவர்களின் சிந்தனைக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யாது. ஆனால் இலங்கை அந்நன்றியைப் போற்றிக் காப்பாற்றியதா?

செஞ் சீனாவை எடுத்துப் பாருங்கள். பயங்கரவாதிகளுக்கு எதிராக இலங்கை அரசுக்கு என்ன உதவியைச் செய்தது? பயங்கரவாதிகள் இயக்கம் தொடங்கி ஒன்றரை மாத காலத்துக்கு மேல் எவ்வித ஆதரவோ உதவியோ செய்யாது மௌனம் சாதித்துக் கொண்டிருந்து விட்டு பயங்கரவாதிகளில் பெரும் பகுதி சரணடைந்த பிற்பாடு, அவர்களின் இயக்கம் வெற்றிபெற முடியாதென்றறிந்தவுடன், ஓடோடி வந்து பதினைந்து கோடி ரூபா உதவி செய்கிறேன் என்று சொன்னவுடன் நீங்கள்தான் எங்கள் இரட்சகர்கள் என்று கூறி அவர்களின் காலடியில் விழுந்து வணங்கிய கேவல வரலாற்றை விட்டுச் சிறிது சிந்தித்துப்பார்ப்போமானால் இலங்கை இந்தியாவின் நட்புறவை என்றுமே விரும்பவில்லை என்பது புலனாகும்.

### சீனாவுக்கு இலங்கை மீது கண்

செஞ் சீனா, இந்தியாவுக்கெதிராகப் பகைமை பாராட்டத்தொடங்கிய காலம் தொட்டே இலங்கையின் மேல் அதற்கோர் கண் என்பது வெள்ளிடைமலை. ஏனெனில் இலங்கை தென்னிந்தியக் கரையில் இருந்து இருபத்திரண்டு மைல் தூரத்தில் இருப்பதனாலும் தமிழ் இலங்கையின் இராணுவ முக்கியத்துவம் பொருந்திய இயற்கைத் துறைமுகம் காரணமாகவும் இலங்கையைத் தனது பிடிக்குள் வைத்திருப்பதற்குச் செஞ்சீனா பகீரதப் பிரயத்தனங்களைச் செய்து கொண்டே இருக்கிறது.

### மற்றோர் ஆபத்து

இதற்கேற்றவாறே செஞ்சீனாவும் அதன் தோழமை நாடான பாகிஸ்தானும் இலங்கையில் கருமங்கள் ஆற்றிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இன்னொரு ஆபத்தும் சேர்ந்து கொண்டுள்ளது. இந்த இரு [illegible] இலங்கையில் [illegible] விமான நிலையம் என்ற போர்வையில் கட்டுநாயகா விமான நிலையம் தவிர இன்னொரு விமான நிலையம் தேவையாம். அதற்காக இரு நாட்டு நிபுணர்களும் தமிழ் இலங்கையின் கண்ணுள்ள பலாலி விமான நிலையத்தைத் தேர்ந்தெடுத்தது ஒன்றும் ஆச்சரியப்படக்கூடிய விஷயமல்ல.

தென்னிந்தியக் கரையிலிருந்து இருபத்தெட்டே மைல் தொலைவிலுள்ள இவ்விமான நிலையம் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் பிரித்தானிய விமானப் படையால் மிகவும் விஸ்தீரமாக அமைக்கப்பட்டது. இதன் முக்கியத்துவம் இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தே மிகவும் தெட்டத்தெளிவாகப் புலனாகியது. தமிழ் இலங்கையில் இருந்து கொண்டே இந்திய உப கண்டத்தையும் கண்காணிப்பதற்கு வசதியாய் அமைக்கப் பெற்றது. பத்துப் பதினைந்து நிமிட நேரத்தில் நூற்றுக்கணக்கான போர் விமானங்கள் மேலே எழும்பவும் கீழே இறங்கி ஒடித் தமது இருப்பிடங்களை அடையவும் வசதியாக அமைக்கப் பெற்றது. இவ்விமான நிலையம் சீன, பாகிஸ்தானிய உதவியுடனேயே அபிவிருத்தி செய்யப்பட இருப்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

### இந்தியாவுக்கு ஆபத்து ஏற்பட இடமுண்டு

இந்தியா தனது வடக்கு, கிழக்கு, மேற்கு எல்லைகளில் இருந்த யுத்தப் பயமுறுத்தல் காரணமாக தென்னிந்தியாவில் தனது ஆயுதத் தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. அத்தோடு அதன் முக்கிய கடற்படைத் தளம் தென்னிந்தியாவின் விசாகபட்டினத்தில் அமைந்திருப்பதினாலும் சீன பாகிஸ்தானியர்களுக்கு இவைகளை உடைத்தெறிவதென்றால் ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்ல வேண்டும். அது அவர்களுக்கு முடியாத காரியம்.

தமிழ் இலங்கையின் பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டால் ஒரே மூச்சில் பறந்து சென்று விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ள இந்தியாவின் கடற்படைத் தளத்தையும், ஆவடியில் அமைந்துள்ள டாங்கித் தொழிற்சாலையையும் மற்றும் ஆயுத தொழிற்சாலைகளையும் தும்பா ரொக்கற் தளத்தையும் ஒரு சில மணி நேரத்தில் உடைத்தெறிந்து விடலாம். மேலும் இதனால் தென்னிந்தியாவில் வாழும் பதினெட்டுக் கோடிக்கு மேற்பட்ட எமதினமாகிய திராவிட மக்களுக்கே ஆபத்தாக முடியலாம்.

தமிழ் இலங்கையில் வாழும் பூர்வீக மக்களாகிய திராவிடத் தமிழர் தமிழினத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் தமிழ் இலங்கைத் தளங்களை எந்நாடாகுதல் உபயோகப்படுத்துவதை எக்காலமும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

மேலும் இலங்கை அரசாங்கம் தமிழ் இலங்கை மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்துவதற்கும், சிங்களப் பிரதேசங்களில் இலட்சக்கணக்கான ஏக்கர் வளம் பொருந்திய பூமி காடாகவும் கட்டாந்தரையாகவும் இருக்கக்கூடியதாக தமிழ் இலங்கையில் குடியேற்றத் திட்டங்கள் என்ற போர்வையில் சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழ் இலங்கையை சிங்கள மயமாக்கவும் தமிழ் மக்கள் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கவும், உள்நாட்டுப் பொருளாதாரத்தையும் வெளிநாட்டு உதவிகளையும் வீண்விரயம் செய்து அழித்து விட்டு இப்போது பொருளாதார முடை தாங்கமுடியாது அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் செஞ் சீனாவும், பாகிஸ்தானும் இலங்கையைத் தமது பிடிக்குள் கூடிய சீக்கிரம் கொண்டு வந்து விடலாம். இதனால் இந்தியாவுக்கு ஆபத்து எக்காலமும் நீங்கப் போவதில்லை.

கடந்துபோன கறைபடிந்த இந்திய உபகண்ட வரலாறு வருங்காலத்தில் பழிவாங்குப்பட்ட லங்களில் கொண்டுபோய் நிறுத்தலாம். ஆனபடியால் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வரவிருக்கும் ஆபத்துக்க

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத்துரை மறுப்பு!

'எம். பீ. க்கள் தேசிய அரசபேரவைக்கு செல்லக் கூடாதென்ற கருத்துடையவர்களால் மகாவளவுக் கூட்டத்தில் வாயைத் திறக்க முடியாமல் இருந்தது. வாயைத் திறக்க மற்றவர்கள் விடவில்லை. விஷயத்தை வாக்கெடுப்புக்குக் கூட விடவில்லை. வாக்கெடுப்புக்கு விட மறுத்துவிட்டார்கள்: நான் பேசாமல் இருக்க வேண்டியேற்பட்டுவிட்டது.

—மேற்கண்டவாறு நான் கூறியதாக தினபதி 29/6/72 இதழின் முன் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த செய்தி பச்சைப் பொய். நான் அப்படி எதுவும் தினபதி நிருபரிடம் கூறவில்லை.

உண்மையில் தேசிய அரசபேரவைக்கு செல்லக் கூடாதென்ற கருத்தும் மகாவளவுக் கூட்டத்தில் பலரால் எடுத்து வாதிடப்பட்டது. திருவாளர்கள் அரியநாயகம், ஈழத்து நாதன், ஈழவேந்தன், சேனாதிராசா, வி. நாகராசா உட்பட பலர் பகிஷ்கரிப்பை ஆதரித்துப் பேசினர். எனினும் இறுதியில் இப்பிரச்சினை மீது வாக்கெடுப்பு நடத்தவேண்டிய அவசியமின்றி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்புக்கு விடுமாறு யாரும் கோரவுமில்லை.

நிலைமை இவ்விதமிருக்க என் பெயரால் வெளியிடப்பட்டிருக்கும் தினபதியின் பச்சை பொய்ச் செய்தியை நம்ப வேண்டாம் என்று தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

—இவ்வாறு மூதூர் பா. உ. திரு. தங்கத்துரை சுதந்திரனுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

## அரசாங்கத்தில் தேசியசபை,...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ் தமிழ் மக்களுடைய ஒரே குரலான தமிழர் கூட்டணியின் கோரிக்கைகளான

(அ) அரசியலமைப்பில் சிங்களத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

(ஆ) இந்நாட்டைத்தமது தாயகமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கு பூரண குடியுரிமைக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். பிரஜைகளில் பிரிவுகளோ, அவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுதலோ இருத்தலாகாது. எவருடைய குடியுரிமையையும் பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இருத்தலாகாது.

(இ) அரசு மதச்சார்பற்றதாக இருக்கும் அதே நேரத்தில் எல்லா மதங்களுக்கும் சமபாதுகாப்பு அளித்தல் வேண்டும்.

(ஈ) தனிமனிதருக்கிடையிலும் இன-கலாச்சார குழுக்களுக்கிடையிலும் சமத்துவத்திற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய, நீதிமன்றம் மூலம் நிலைநாட்டக் கூடிய அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பில் இடம் பெற வேண்டும்.

(உ) சாதியையும் தீண்டாமையையும் ஒழிக்க வேண்டுமென்பது அரசியல் அமைப்பில் இடம் பெறவேண்டும்.

(ஊ) அதிகாரம் அரசின் உடமையாக இல்லாது மக்கள் உடமையாக இருக்கக்கூடிய மக்கள்பங்கு கொள்ளும் சனநாயக ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஓர் அமைப்பிலேயே சனநாயக சமதர்ம சமுதாயம்சாத்தியமாகும் என்ற கொள்கை அரசியலமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

என்பவற்றை ஏற்று அதற்கமைய அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்னும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருப்பதாக கொள்கைப் பிரகடனத்தில் காணப்படாததையிட்டும் இச்சபை வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது.

### இரண்டாவது திருத்தம்

'ஆனால் கௌரவ பிரதம மந்திரி அவர்களுடைய கொள்கை விளக்க உரையில் இந்நாட்டில் சென்ற பதினைந்து மாதங்களாக அமுலிலிருந்து வரும் அவசரகால நிலையை நீக்கி, இந்நாட்டு மக்கள் பூரண சனநாயக உரிமைகளை அனுபவிக்க விடும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தோற்றுதலையிட்டும், குறிப்பாக இந்நாட்டின் ஏனைய பாகங்களிலும் பார்க்க அமைதியும் சட்டஒழுங்கும்பேணப்பட்டிருக்கும் பகுதிகளானவடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு ஏனைய மாகாணங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பேச்சுரிமை அமைதியான ஆர்ப்பாட்ட உரிமைகள் தன்னும் மறுக்கப்பட்டிருப்பதை நீக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருப்பதாக காணப்படாமையையிட்டும் நிரபராதிகளான தமிழ் இளைஞர்கள் பலரை எவ்வித விசாரணையுமின்றி சிறைகளிலும் தடுப்புக்காவலிலும் பல வாரங்களாக வைத்திருப்பதை கைவிடும் எண்ணம் இருப்பதை காட்டாததையிட்டும் இச்சபை இவ்வரசாங்கத்தில் நம்பிக்கையை இழந்து விட்டதென்று வருத்தத்துடன் தீர்மானிக்கிறது.'

—

## அரசியல் மடல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பியபடி வழி நடத்திட சிங்கள முதலாளிகளின் கைக்கூலித் தமிழ் ஏடுகளுக்கு அணுவளவும் உரிமையுமில்லை — அப்படி வழி நடத்திட அவற்றினால் ஒருபோதுமே முடியாது; அதைத் தமிழ் மக்களோ இளைஞர்களோ அனுமதிக்கப்போவதுமில்லையென்பதை அந்த ஏடுகளை நடத்துவோருக்கு கூறி வைத்திட விரும்புகிறேன்!

உரிமைக் கிளர்ச்சியில் இறங்கிட அக்டோபர்வரைகூட நாம் காத்திருக்கவேண்டியதில்லை. தமிழர் கூட்டணியின் மற்றோர் தீர்மானப்படி இந்த மாதமே களத்தில் இறங்கிடவும் நேரிடலாம்!

இத்திங்கள் (ஜூலை) 22ம் நாளுக்கு முன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுக்கூட்டங்களுக்கும் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்படவேண்டும் —இன்றேல் இத்திங்கள் 22ம் நாள் தமிழ் ஈழமெங்கணும் மீண்டும் ஒரு ஹர்த்தால் நடத்துவதுடன் அன்றிலிருந்து தடையை மீறிக் கூட்டங்களை நடத்துவோம் என்றும் திட்டவட்டமாக தமிழர் கூட்டணி அரசுக்கு அறிவித்துவிட்டிருக்கிறது.

அறப் போர்க்களத்தில் உடனடியாகக் குதித்திட துடித்து நிற்கும் தீவிர இளைஞர்களுக்கு—செயல்வேண்டும் என்று கோரி நிற்கும் மாணவர்களுக்கு தமிழர் கூட்டணியின் இந்த முடிவு மகிழ்ச்சியைக் கொடுத்திடும் என்பதில் தடையில்லை.

எனவே நண்பா, காலம் சிறிது, கடமைகள் பெரிது-அக்கடமைகளை கட்டுப்பாட்டுடன் செய்திடுவதில் இன்றே இறங்கிவிடு! தொண்டர்களை திரட்டிடுவோம்! தூயபோர் துவங்கிடுவோம்! பாசறை அமைத்திடுவோம்! பைந்தமிழுக்கு வாழ்வு சேர்த்திடுவோம்!!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

## தமிழர் கூட்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அனுஷ்டிக்குமாறு மக்களைக் கோரி அன்றிலிருந்து இத்தடையை மீறுவதென்றும் கூட்டணி தீர்மானிக்கிறது.

மேலும் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளின் தன்மையையும் அவற்றை அடைய நாம் கைக்கொள்ளும் சாத்வீக நெறியின் தத்துவத்தையும் சிங்கள மக்களுக்கு விளக்கி, நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றின் அடிப்படையில் அமைந்த ஓர் சமுதாயத்தை ஆக்குவதற்கு அவர்களுடைய சகோதர ஒத்துழைப்பைப் பெறுவதென்றும் கூட்டணி தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 4

எந்த விதக்காரணமுமின்றி தமிழர் கூட்டணி இணைச்செயலாளரான காசி ஆனந்தனும் கூட்டணி ஆதரவாளரான ஆனந்தவிநாயகமும் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதையும் மற்றும் 70க்கு மேற்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் காரணம் ஏதுமின்றி ஒரு மாதத்துக்கும் மேலாக ரிமாண்ட் சிறையில் வைக்கப்பட்டிருப்பதையும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு மிக வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாக அவர்களை விடுதலை செய்யுமாறும் கோருகிறது.

### தீர்மானம் 5

ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் தமிழர் கூட்டணி கீழ்க் கண்ட வேண்டுகோளை விடுக்கின்றது:—

(அ) சிந்தனை, சொல், செயல் எல்லாவற்றிலும் சாத்வீகத்தையே கடைப்பிடித்து மக்களின் ஆத்மீக சக்தியை உயர்த்த வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு மாதமும் 22ந் திகதி தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேறுவதற்கான பிரார்த்தனை தினமாகவும் நோன்பு தினமாகவும் அனுஷ்டிக்க வேண்டும்.

(இ) உங்கள் சூழலில் உள்ள ஒரு நல்ல திட்டத்திற்கு மாதத்தில் ஒருநாள் சிரமதான உழைப்பைக் கொடுத்து சுற்றுடலில் உள்ளவர்களோடு பிணைப்பைப் பலப்படுத்த வேண்டும்.

(ஈ) தமிழர் விடுதலைக்கான இந்த இயக்கத்திற்கும் தமிழ் மக்களுடைய நல அபிவிருத்திக்குமான பொது நிதிக்கு மாதத்தில் ஒருநாள் உழைப்பை அல்லது வாரத்தில் ஒருபிடி அரிசியை அளித்தல் வேண்டும்.

(உ) தமிழ்ப்பேசும் மக்களுடையசுயாதீனத்தையும் சுயமரியாதையையும் நிலைநாட்டக் கூடியதாக நீங்கள் அரசாங்கத்தோடும் அதைச் சார்ந்த நிறுவனங்களோடும் கொள்ளும் சகல தொடர்புகளுக்கும் தமிழையே உபயோகிக்க உறுதி பூணவேண்டும்.

## சூரியனும் வெள்ளியும்

சூரிய பகவானின் வீட்டு வளவினுள் வெள்ளி ஒன்று விழுந்ததாகவும் இதனால் சிறு சேதம் ஏற்பட்டதாயும் அறியப்படுகிறது. சூரிய பகவான் தமிழ் சமுதாயத்திற்கு தொடர்ந்து செய்து வரும் துரோகச் செயல்கள் கண்டு இயற்கை கூடப் பொறுக்காது இவ்விதம் வெள்ளி விழுந்ததெனவும், வெள்ளி விழுவது அபசகுனமென சோதிடர்கள் கூறுவதாகவும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

சூரியபகவான் ஆயுத வீரர்கள் புடைசூழ கோயில் சென்று வணங்கவேண்டிய பரிதாபகரமான நிலையில் இருந்ததையும் மக்கள் நினைவு கூர்ந்து, அமைச்சரின் இந்நிலை கண்டு பரிதாபப்படுகிறார்கள்.

## யாழ் மாநகர சபையைக் கலையுங்கள்!

யாழ் மாநகர மக்களின் நலனை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபையை உடனடியாகக் கலைக்கும்படி உள்ளூராட்சி அமைச்சரிடம் யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர் சங்கம் கோரியுள்ளது.

யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கட்டிடத்தில் கடைகள் வாடகைக்கு விடுவதில் நடைபெற்றதாக கூறப்படும் ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக விசாரணை நடத்த ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

## தினபதி செய்தி முழுப்பொய்!

தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் கூட்டம் முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே நடைபெற்றதாக 28-6-72 தினபதியின் முன்பக்கத்தில் வெளிவந்த செய்தி விஷமத்தனமானதும் முழுப்பொய்யானதென்றும் கூட்டம் முழுவதும் தனித்தமிழிலேயே நடந்ததாகவும் நடவடிக்கைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு. ஈழவேந்தன் தெரிவித்தார்.

—

## தமிழர் கூட்டணியின் மூன்று குழுக்கள்!

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு மூன்று உபகுழுக்களை நிறுவியுள்ளது. போராட்டத் திட்டங்களைத் தீட்ட ஒரு குழுவும், தொண்டர்களைச் சேர்த்து பயிற்சி கொடுக்க ஒரு குழுவும், நிதி சேகரிப்புக்கு ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

## காசி ஆனந்தன் வரவேற்பு!

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழர் கூட்டணியின் இணைச்செயலாளர்களில் ஒருவரான கவிஞர் காசி ஆனந்தனும், மற்றோர் இளைஞரான ஆனந்த விநாயகமும் தேசியப்பேரவைக்கு செல்வது என்று தமிழர் கூட்டணி எடுத்த முடிவை வரவேற்றுள்ளனர். கூட்டணி எடுத்தமுடிவு மிகவும் நல்ல முடிவு என்று கவிஞர் காசி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

## நாளேடுகளின் நரித்தனம்!

மாணவர் பேரவையைச் சேர்ந்த நூற்றுக்கு மதிகமான மாணவர்கள் தேசிய பேரவையை பகிஷ்கரிக்கும்படி வற்புறுத்தினர்.

(தினகரன் 26-6-72)

பதவி துறக்குமாறுகோரி 500 இளைஞர் ஆர்ப்பாட்டம்

—தினபதி (யாழ்ப்பாணப் பதிப்பு—26-6-62)

பதவி துறக்குமாறுகோரி 1000 இளைஞர் ஆர்ப்பாட்டம்

(தினபதி 26-6-72 — கொழும்புப் பதிப்பில்)


**ஓர் நற்செய்தி**

1-7-72 தொடக்கம் மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வெளிவரவிருக்கின்றது. பெறுமதியான பரிசுகள் காத்திருப்பதால் மேலுறைகளை சேகரியுங்கள்.

மில்க்வைற் ஸ்தாபனத்தார்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணிக்கூட்டத்தைக் குழப்பமுயன்ற

## நாசசக்திகளின் சூழ்ச்சி முறியடிப்பு!

## தேசியப் பேரவைக்குச் செல்லுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆணை!

**தேசிய அரச பேரவைக்கு தமிழர் கூட்டணிப் பா. உ. க்கள் செல்வதா இல்லையா என்ற பிரச்சினையில் சகல கருத்துக்களையும் மனம் விட்டு அலசி ஆராய்ந்த பின்னர், தமிழர் கூட்டணியிலுள்ள பா. உ. க்களை தேசியப் பேரவைக்கு செல்லுமாறும் அங்கு தமிழினத்தின் விடுதலைக்குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யுமாறும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு ஏகமனதாக கட்டளையிட்டுள்ளது. தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் இந்த முடிவு, அரசியல் தீர்க்கதரிசனமும், இராசதந்திரமும் நிறைந்தது என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.**

கடந்த ஒருமாதகாலமாக தமிழர்கூட்டணிபா.உ.க்கள் தேசியப் பேரவைக்குச் செல்வதா இல்லையா என்ற பிரச்சினை சூடாக விவாதிக்கப்பட்டு வந்ததும், இப்பிரச்சினையைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயத்தை அடையும் ஒரேநோக்குக்கொண்ட சில சக்திகளும், தமிழர்களின் எதிரியான தினபதிப் பத்திரிகையும், இதில் தலையிட்டு குட்டையைக் குழப்பி தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியைத் திசை திருப்பித் தமிழர்கூட்டணியைஉடைக்கவும், தமிழர் கூட்டணிமீது நம்பிக்கை இழக்கச் செய்யவும் திட்டமிட்டுச் சூழ்ச்சிகள் புரிந்து வந்ததையும் தமிழ் மக்கள் அறிவார்கள். தேசியப் பேரவைக்குச் செல்வது சரணாகதியடைவது போன்றது என்கின்ற ஒரு விஷமத்தனமான கருத்தை இளைஞர் உள்ளங்களில்புகுத்தத் தினபதி சூழ்ச்சி செய்து வந்தது.

இந்தப் பிரச்சினை மீது முடிவு எடுப்பதற்கு 25-6-72 யாழ் நகரில் கூடவிருந்த தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தைக் குழப்பி, தமிழர் கூட்டணிக்கு தமிழர் பிரதேசத்தில் ஆதரவு இல்லையென்று காட்டும் ஒரே நோக்குடன் சில விஷமத்தனமான சக்திகள் வேலை செய்தன.

தமிழர் கூட்டணியின் முடிவை அறிவதில் துடிப்புடன் நின்ற மாணவர்களிடையே இந்த விஷமச் சக்திகளும் எப்படியோ புகுந்துகொண்டு, தமிழர் கூட்டணிக் கூட்டத்தை நடத்தவிடாது குழப்புவதற்குக் கங்கணம் கட்டி நின்றன. இந்தச் சூழ்ச்சியை முறியடிக்கும் நோக்குடனேயே தமிழர் கூட்டணிக் கூட்டம் திடுதிப்பென்று கோப்பாய்க்கு மாற்றப்பட்டது.

இதைத் தவிர, தினபதி வெளியிட்டதுபோல உண்மையான ஆர்வமிகுந்த இளைஞர்களின் கேள்விகளுக்கு அஞ்சியோ, பயந்தோ தமிழர் கூட்டணித் தலைவர்கள் ஓடவுமில்லை — பதுங்கவுமில்லை.

தமிழர் கூட்டணிக் கூட்டத்தைக் குழப்ப முயன்ற நாசசக்திகள் ஏமாற்றம் அடையவே மாணவர்களின் போர்வைக்குள் மறைந்து நின்று கூட்டணியை தாக்கி செய்திகள் வெளியிட்டு உள்ளம் பூரித்துப் போயிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் இல்லமான 'மகாவளவில்' காலை 11 மணிக்கு தந்தை செல்வா தலைமையில் நடவடிக்கை குழுக் கூட்டம் ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள், தமிழ் காங்கிரசைச் சேர்ந்த திருவாளர்கள், மு. சிவசிதம்பரம், வி. ஆனந்தசங்கரி, திருநாவுக்கரசு, தா. சிவசிதம்பரம், யாழ் பெற்றோர் சங்கத்தலைவர் வழக்குரைஞர் எஸ். பொன்னையா, இளைப்பாறிய நீதவான் தம்பித்துரை, பேராசிரியர் நேசையா, இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி, சேவுகப் பெருமாள் முன்னாள் மேயர் வி. நாகராசா, ஈழவேந்தன், ஈழத்துநாதன், அ. எ. வி. சங்கத்தலைவர் தர்மலிங்கம் உட்பட 40 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பேரவைக்கு செல்லக் கூடாது என்ற கருத்தும் செல்லவேண்டும் என்ற கருத்தும் அங்கு முட்டி மோதி இதன் மீது வாதங்கள் சூடாக நடைபெற்றன.

இறுதியில் தமிழர் கூட்டணி பா. உ. க்கள் பேரவைக்கு சென்று தமிழினத்தின் விடுதலைக்குரலை வலுவுடன் எடுத்துக்கூற வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக அங்கு நிறைவேறியது.

இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தேசியப்பேரவைக்கு செல்லாமல் விடுவதால் தமிழ் இனத்துக்கு ஏதாவது இலாபம் கிடைக்குமாக இருந்தால் அல்லது தேசியப் பேரவைக்கு செல்வது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தடையாக இருக்குமானால் நிச்சயம் போகக்கூடாதுதான். ஆனால் தேசிய சபைக்கு போகாமல் விடுவதால் இனத்துக்கு நன்மை ஏதும் ஏற்பட்டுவிட முடியாது. மாறாக நமது உரிமைக் குரலையும், நமது இளைஞர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் ஊரறிய உலகறிய எடுத்துக் கூறக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை நாமாகவே இழந்து விடுவது போன்றதாகவேயிருக்கும்.

தேசிய அரச பேரவைக்கு செல்வது எந்த வகையிலும் நமது போராட்டத்தைக் கட்டுப் படுத்தாது. அயர்லாந்தின் சுதந்திரப் போராட்டத்தின் போது, பிரிட்டிஷ் அரசருக்கு விசுவாசப் பிரமாணம் செய்துவிட்டு நாடாளுமன்றத்துக்கு சென்று அங்கு நின்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக முழங்கினார்கள் விடுதலை வீரர்கள். அதே சமயம் வெளியில் ஆயுதமேந்தி பிரிட்டிஷ் படையை எதிர்த்தும் போராடினார்கள்.

தமிழ் பா.உ.க்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதென்பது நமது விடுதலைப் போராட்டத்தின் கடைசிக் கட்டமாகவேயிருக்க வேண்டும். தமிழினத்துக்கென்று தனி அரசு ஒன்று இந்நாட்டில் நிறுவப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் எப்பொழுது தென்படுமோ, அப்பொழுதுதான் தமிழ் பா.உ.க்கள் பதவிகளை உதறி எறிய வேண்டும். அந்தக் காலம் வரும் வரை பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பதால் பயன் இல்லை.

விசுவாசப் பிரமாணம் என்பது ஒரு வெறும் சம்பிரதாயம். வள்ளுவர் எமக்கு கூறியிருப்பது ''பொய்மையும் வாய்மையிடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்'' என்பதுதான்!

நமது இளைஞர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை ஊரறிய உலகறிய அம்பலப்படுத்தவும், தமிழ் மக்களின் மனக்கொதிப்பை வெளிப்படுத்தவும் விடுதலைக் கோரிக்கையை விட்டுக் கொடாமல் வாதாடவும் நாடாளுமன்றத்தில் நமது உறுப்பினர்கள் இருக்கத்தான் வேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு செல்வதை இளைஞர்கள் எதிர்க்கிறார்கள் என்று ஒரு பிரசாரம் நடத்தப்படுகிறது. இது முழுக்க முழுக்க பொய்யான பிரசாரமாகும். எத்தனையோ இளைஞர்கள்—மிகவும் தீவிரமான கருத்துடையவர்கள் நாடாளுமன்றத்துக்கு செல்லவேண்டும் என்று என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

இன்று சிறைச்சாலைகளிலே வாடிக்கொண்டிருக்கும் இளைஞர்கள்கூட நாடாளுமன்றத்துக்குப் போகவேண்டுமென்றே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே மாணவர்களும், இளைஞர்களும் தேசியப் பேரவையை பகிஷ்கரிக்கவேண்டுமென்று கூறுகிறார்கள் என்பது பொருத்தமற்ற பொய்யான கூற்றாகும்.

நாடாளுமன்றத்துக்கு செல்லும் கூட்டணி பா.உ.க்கள், தங்கள் முழு நேரத்தையும் தமிழர் உரிமைப் போராட்டம்பற்றி பேசுவதிலேயே செலவிடவேண்டும்.''

உடுப்பிட்டி முன்னாள் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பது பயனற்றதென்பதே தமது கருத்து என்று தெரிவித்தார்.

இ. தொ. கா. செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்லவேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்திப் பேசினார்.

திருவாளர்கள் ஈழவேந்தன், அறப்போரணித் தலைவர் அரியநாயகம், ஈழத்துநாதன், சேனாதிராசா வி. நாகராசா ஆகியோர் பகிஷ்கரிப்பை ஆதரித்து முதலில் தீவிரமாக வாதாடியபோதிலும், முடிவில் நாடாளுமன்றத்துக்கு செல்லவேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவு அளித்தது குறிப்பிடத்தக்கது.

---

## இந்தியத்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ளைத் துடைத்தெறிவதற்கு இந்திய அரசு முன்னின்று தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு உறுதியான ஆதரவு நல்க வேண்டியது அதன் தலையாய கடமையாகும்.

### ஆதரவு தருவீர்

இலங்கையின் ஆதிவரலாறுகளையும், அன்னியர் இலங்கையைக் கைப்பற்றும் போது இருந்த வரலாறுகளையும் இந்தியத் தலைவர்கள் படித்தறிந்து அதற்கேற்ப தமிழ் இலங்கை மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவு நல்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## தமிழ் இளைஞர்களே!

### தொண்டர்படையில் சேருவீர் !

தமிழர் கூட்டணி தன் போராட்டத்தைத் தொடங்குதற்கு செப்ரம்பர் 30ஆம் திகதி வரை அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுத்துள்ளது. தமிழரின் நியாயமான அடிப்படை உரிமைகளான மொழி உரிமை, குடி உரிமை, ஆட்சி உரிமைகளை 30-9-72க்கு முன் கொடுப்பதற்கு அரசியலமைப்பைத் திருத்தாவிடின் அறப் போராட்டம் 1-10-72ல் மும்முரமாகத் தொடங்கும் என்று அரசாங்கத்துக்குத் தமிழர் கூட்டணி அறிவித்தல் கொடுத்துள்ளது. அறப்போராட்டத்துக்கு அறிவித்தல் கொடுப்பது காந்தீய வழியாகும்.

அறிவித்தல் கொடுப்பதோடு மட்டும் நாங்கள் நிற்கவில்லை. அறப்போருக்குத் தேவையான தொண்டர் படையினைச் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இனிப் பொறுக்க முடியாது; உரிமை இழந்து வாழ முடியாது. போராட நாங்கள் வந்துவிட்டோம். ஏன் இன்னும் தயக்கம்! தொடங்குங்கள் போராட்டத்தை என்று அஞ்சாமலும் அசையாமலும் கூறிவரும் வீர இளைஞர்களே! தொண்டர் படையில் ஆயிரம் ஆயிரமாகச் சேருங்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் தொண்டர்கள் வேண்டும் தொகுதிவாரியாக இப்படை நிறுவப்படும்.

அகிம்சை முறையில் கட்டுப்பாட்டுடன் அறப்போரில் ஈடுபடுதற்கு ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரத்துக்குக் குறையாத இளைஞர்களைத் திரட்டத் திட்டம் இட்டுள்ளோம். இதன் கீழுள்ள விண்ணப்பப் படிவத்தை நிரப்பிக் கையொப்பமிட்டு உங்கள் தொகுதியிலுள்ள தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்புங்கள், கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத தொகுதியிலுள்ளவர்கள் தமிழர் கூட்டணியின் மாவட்டக் கிளைத் தலைவர்களுக்கோ — தமிழர் கூட்டணியின் முன்னைய பாராளுமன்ற வேட்பாளர்களுக்கோ — 25, இரண்டாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் எனும் தமிழர் கூட்டணி அலுவலகத்துக்கோ அனுப்பலாம். இந்தப் படிவத்தைப் பிரதி செய்தும் விண்ணப்பங்களை அனுப்பலாம்!

### தமிழர் கூட்டணி தொண்டர் படை

முழு பெயர்.......................................................

தகப்பனின் .......................................................

முகவரி.......................................................

.......................................................

.......................................................

உள்ளூர் ஆட்சி மன்றம்............வட்டார எண்

பாராளுமன்றத் தொகுதி .........................

வயது...................

பிறந்த திகதி.........................

தொழில்.......................................................

நான் தொண்டர் படையின் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து அகிம்சை முறையில் கண்ணியமாகக் கடமை ஆற்றுவேன்.

..............................

கைஒப்பம்

சிபார்சு செய்பவரின் பெயர்..........................

முகவரி..................................................

....................................

கை ஒப்பம் ....................................

கா. பொ. இரத்தினம் பா. உ.

( தொண்டர்படை அமைப்புக் குழுவின்சார்பில் )

---

### அனுதாபம்

நெடுங்கேணி நயினாமடுவைச் சேர்ந்த முன்னாள் மடு கிராம சபைத்தலைவரும் தமிழரசுக் கட்சியின் தீவிர தொண்டருமாகிய வாமதேவன் அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு தமிழரசுக் கட்சியின் ஊஞ்சால் கட்டிப் பிரிவுக்கிளை தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

---

**அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்**

**பயணக்கட்டுரை**

**அடுத்த கிழமையிலிருந்து தொடர்ந்து இடம் பெறும்.**

—ஆர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் சட்டமும் தமிழ் மொழியும்-2

## தமிழ் புறக்கணிப்புக் கண்காட்சி

## குடியரசு முத்திரை கூறும் குறி!

(அரசியலமைப்பில் தமிழுக்கு விசேட உரிமைகள் கொடுக்கப்பட்டு விட்டன என்று பத்திரிகைகளில் பொய்யையும் புரட்டையும் புழுகையும் வெளியிடும் கூலிப் படைகளின் கோமாளிக் கூத்து இன்னும் ஓயவில்லை. சமசமாசக் கட்சியைச் சேர்ந்தவரும் தரப்படுத்தல் எனும் போர்வையில் தமிழ் மாணவர்களுக்குத் துரோகம் செய்யப்பட்டுள்ளது என்று ஒரு சிறு நூல் வெளியிட்டவரும் பின்னர் தரப்படுத்தல் சரிதான் என்று குத்துக்கரணம் போட்டு அரசாங்கத்தின் புகழ் பாடிவருபவருமான திரு. வி. சச்சிதானந்தம் என்பவர் இப்பொழுது அரசியலமைப்பில் காணாத தமிழுரிமைகளைக் கண்டு கொக்கரிக்கிறார். அவருடைய பித்தத்தை இத் தொடர் கட்டுரையும் ஊர்காவற்றுறைப் பா. உ. திரு. இரத்தினம் அண்மையில் வெளியிட்ட அடிமைச்சாசனம் எனும் நூலும் தெளிவிக்கும் என எண்ணுகின்றோம்.)

இன்றுவரை தமிழ் மொழிக்கு இந்த அரசாங்கம் எவ்வித உரிமையைக் கொடுக்கவும் நடவடிக்கைஎடுக்கவில்லை. இதை இடித்து இடித்துச் சுட்டி காட்டினோம். எதுவும் உருப்படியாகச் செய்யப்படவில்லை. தமிழ் உரிமைகளைப் பறிப்பதிலும், புறக்கணிப்பதிலும், சிங்களச் சொற்களைத் தமிழில் புகுத்துவதிலுமே தொடர்ந்து அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த அரசாங்கத்தின் தமிழ்மொழிப் புறக்கணிப்பை எல்லோரும் கண்ணாரக் காணத்தக்கதாக 1971 மாசியில் தமிழ்ப் புறக்கணிப்புக் கண்காட்சி ஒன்றினை நடாத்தினோம். அரசாங்கத்தின் அமைச்சர் இருவரை இக்காட்சியை வந்து பாருங்கள் என்று அழைத்தோம். "பார்த்தால் தமிழ்ப்பகுதிக்கு வருகை தரும் பொழுது தமிழ் உரிமைகளைக் கொடுக்கிறோம் என்று கூறி ஏமாற்றுவதை நீங்களும் உங்கள் தோழர்களும் நிறுத்துவீர்கள்" என்றும் கூறினோம்.

இன்று தமிழ் மொழிக்கு என்ன உரிமை கொடுக்கப்பட்டுள்ளது? தமிழ்ப் பகுதிகளில் தமிழர் எந்த மொழியில் ஆளப்படுகின்றனர்? தமிழ் தெரியாத அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் ஆட்சி நடத்துகின்றனர். கச்சேரிகள், காரியாதிகாரி அலுவலகங்கள், கல்வி அலுவலகங்களிலிருந்து சிங்களத்திலும் (ஆங்கிலத்திலுமே) கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. யாழ்ப்பாணக் கச்சேரி தனிச் சிங்களத்திலே பற்றுச் சீட்டுக்களைக் கொடுக்கிறது. தமிழ் தெரியாத பொலிசார் சிங்களத்தில் எழுதும் வாக்கு மூலங்களைத், தமிழர் ஏற்றுக் கையொப்பமிடுகிறார்கள். 'சிங்களம் தெரியாது; தமிழில் எழுதுங்கள்' என்று கேட்டால் பொலிசு நிலையங்களில் அடியும் உதையுந்தான் கிடைக்கும்.

### தனிச் சிங்களம்

இ. போ. ச., கல்வி அமைச்சு, சுகாதாரத் திணைக்களம் முதலிய பலவற்றிலுள்ள பதவிகளுக்குத் தமிழில் விண்ணப்பம் அனுப்பும் சிங்களம் தெரியாத தமிழ் இளைஞர்களுக்கு விடுக்கப்படும் அழைப்பு முதலியன தனிச் சிங்களத்தில் மட்டுமே உள. நெடுந்தீவு முதலிய இடங்களிலிருக்கும் இளைஞர்கள் இவற்றிலுள்ளவற்றை அறிதற்கு யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள சிங்கள மக்களைத் தேடிப்பிடிக்க வேண்டியுள்ளது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் அவசரகாலச் சான்றிதழ் பெறுவதற்குத் தமிழில் நிரப்பிக் கொடுக்கும் படிவங்களை அங்குள்ள உத்தியோகத்தர் ஏற்க மறுக்கின்றனர்; ஆங்கிலத்திலும் நிரப்பவேண்டுமென்று கட்டளையிடுகின்றனர். தமிழில் நிரப்பி அனுப்பும் படிவங்கள் எங்கும் பொதுவாக நிராகரிக்கப்படுகின்றன.

குடியரசான பின் அரசாங்க அலுவலகங்களிலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் பல தனிச் சிங்களத்திலுள்ளன. தமிழில் எழுதுவோருக்குச் சிங்களத்திலும் (ஆங்கிலத்திலும்) மட்டுமே மறுமொழி அனுப்பப்படுகின்றது. பல படிவங்கள் இன்னும் தமிழில் வெளியிடப்படவில்லை.

பண்டிதர்

**கா. பொ. இரத்தினம்**

### போராட்டப் பயன்

இப்பொழுது சில படிவங்களிலும் வெளியீடுகளிலும் பெயர்ப் பலகைகளிலும் தமிழும் இடம் பெற்றுள்ளதெனில் பாராளுமன்றத்தில் நாங்கள் கேட்ட பல கேள்விகளினாலும் அமைச்சர்களுக்கு எழுதிய கடிதங்களினாலுமே இவற்றில் தமிழ் இடம்பெற்றுள்ளது. கடுகதிச் சீட்டுத் துண்டில் தமிழை இடம்பெறச்செய்தற்குப் பாராளுமன்றத்தில் மூன்றுமுறை கேள்விகேட்டேன். பதிவுச் சீட்டுத்துண்டிலும் பல திகதி முத்திரைகளிலும் தமிழ் இன்னும் இடம் பெறவில்லை. நான்காவது முறை கேள்விகேட்பதற்கு முன் இதுபற்றி இன்றுவரை அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சருக்கு மூன்று நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பியுள்ளேன்.

1956ஆம் ஆண்டுதொடங்கித் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடித உறைகளில் பொறித்து வந்த தமிழ் அடையாள முத்திரைகளைப் பயன்படுத்துவதை அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சு ஆறு மாதங்களாகத் தடுத்து வந்தது. ஆறுமாதங்கள் தொடர்ந்து பாராளுமன்றத்திலும் வெளியிலும் போராடிய பின் அமைச்சரவை தமிழ் அடையாள முத்திரையைப் பாராளுமன்ற உறுப்பினர் பயன் படுத்துதற்கு அஞ்சல் பிரமாணங்களைத் திருத்தி அதிகாரம் வழங்குவதென முடிவுசெய்தது. நான்கு மாதங்களாகியும் இந்தத் திருத்தம் கூட இன்னும் செய்யப்படவில்லை; தொடர்ந்து நினைவூட்டிக்கொண்டிருக்கிறேன்.

### குடியரசு முத்திரை கூறும் குறி

அரசியல் அமைப்பில் தமிழ் உரிமைகளும் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளும் புறக்கணிக்கப்பட்டன; பெரும்பான்மையினத்தவரான சிங்களவரின் மொழி சமயம் முதலியவற்றுக்குத் தனிப் பாதுகாப்புக்கள் பொறிக்சப்பட்டுள்ளன என்று நாங்கள் கூறுவதையும், இனிக் குடியரசில் தமிழுக்கு எவ்வித உரிமை கிடைக்கப் போகிற தென்பதையும் குடியரசு நினைவு முத்திரையில் தமிழுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பு நன்கு காட்டும். "தமிழர்" என்று சிங்கள மக்கள் போற்றும் அமைச்சர் ஒருவரின் பொறுப்பிலுள்ள திணைக்களம் வெளியிட்ட 15 சத முத்திரையில் "குடியரசு" என்று தமிழில் சாட்டுக்காகப் போடப்பட்டிருக்கும் சொல்லின் தெளிவையும் சிங்களச் சொல்லின் அளவையும் குறித்து 'வெள்ளி' ஏடு எழுதியிருப்பதை அப்படியே கீழே தருகின்றோம்.

"இலங்கை குடியரசானதைக் குறிக்குமுகமாக 15சத முத்திரை ஒன்றை அரசு வெளியிட்டிருக்கிறது. ஒரு மலையின் பின்னணியில் சூரியனைக் காட்டி, அதன் முன்னால் ஒரு தடாகத்தில் தாமரைப்பூவையும் காட்டியிருக்கிறார்கள். 'ஜனறஜய' என்ற சிங்கள எழுத்துக்கள் தாமரைப்பூவின் கீழ் பளிச்சிடுகின்றன. அதன் கீழே இன்னும் ஏதோ எழுத்துக்கள் மங்கலாக சிறிய எழுத்தில் தெரிவது போல இருக்கிறது. பூதக்கண்ணாடியை வைத்துப்பார்த்தால் 'குடியரசு' என்று இருப்பதை ஊகிக்கலாம். தமிழர்களைப் பொறுத்த மட்டில் 'குடியரசு' இவ்வளவு மங்கலாக மறைவாக இருப்பதை அரசாங்கமே அனுமதிக்கலாமா?"

### சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடுமை

சிங்களத்தை ஆட்சிமொழியாக்கித் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் போர்த்துக்கீச—ஒல்லாந்த—பிரித்தானிய ஏகாதிபத்தியங்களே செய்யாத அநீதியைப் பௌத்த சிங்கள அரசாங்கம் துணிந்து செய்கின்றது. ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களையுந் தங்கள் மொழியைக் கற்றுப் பரீட்சைகளில் சித்தியடையுமாறு வற்புறுத்தவில்லை; சித்தியடையும்வரை சம்பள ஏற்றத்தை நிறுத்தவில்லை; சித்தியடையாதவர்களை வேலையினின்றும் நீக்கவில்லை. சிங்கள ஊழியர்களுக்கு, விளங்காத மொழித் தலைகளையைத் தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பெறுமாறு வற்புறுத்தவில்லை.

இந்த ஏகாதிபத்தியங்கள் சிங்களம் மட்டும் தெரிந்தவர்களுக்கும், தமிழ் மட்டும் தெரிந்தவர்களுக்கும் உத்தியோகங்களைக் கொடுத்தன. ஆளுகிறவர்களாகிய தங்கள் மொழியை இந்த உத்தியோகத்தர்கள் கற்க வேண்டுமென அவை கட்டாயப்படுத்தவில்லை. ஆளும் இனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நாட்டு மொழிகளான சிங்களத்தையும் தமிழையும் படிக்குமாறு அந்த ஏகாதிபத்தியங்கள் தூண்டின. ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஆங்கிலத்தில் கடமையாற்றிய சிங்கள உத்தியோகத்தரும் தமிழ் உத்தியோகத்தரும் இந்நாட்டு மொழிகளான சிங்களத்திலும் தமிழிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். இவர்கள் இருமொழிகளிலும் ஓரளவு தேர்ச்சி பெறவேண்டுமென அரசாங்கத்தால் அப்பொழுது கட்டாயப்படுத்தப்பட்டனர்.

சிங்களத்திலும் தமிழிலும் கடமையாற்றிய தலைமை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், நொத்தாரிசுமார், திருமண - இறப்பு -பிறப்புப் பதிவாளர்கள், கிராம சேவையாளர்கள், (உடையார், விதானைமார்) தட்டெழுத்தாளர்கள், மருத்துவ மாதர்கள், அலுவலக சேவகர்கள், தபால் தந்திச் சேவகர்கள், காவல்காரர், சமையல்காரர், சாரதிகள், ஏவலாளர், கவனிப்பாளர், கைதேர்ந்த தொழிலாளர், வெளிக்களத் தொழிலாளர், விற்பனையாளர், பிற சிற்றூழியர்கள் முதலானோரை ஆட்சிமொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற வேண்டுமெனக் கட்டாயப்படுத்தவில்லை ஆங்கில ஏகாதிபத்தியம்.

ஆனால், இப்பொழுது சிங்கள ஏகாதிபத்தியம் என்ன செய்கின்றது? முன்னர் ஆங்கிலத்தேர்ச்சிபெறத் தேவையில்லாத தமிழ் உத்தியோகத்தர் எல்லோரையும் சிங்களத்தில் தேர்ச்சிபெறுமாறு கட்டளையிடுகின்றது; ஆங்கிலத்தில் கடமையாற்றிய தமிழ் உத்தியோகத்தர்கள் எல்லோரையும் சிங்களத்தில் கடமையாற்றுமாறு பணிக்கிறது; தமிழ் உத்தியோகத்தர்கள் எல்லோரையுமே சிங்களத்தில் தேர்ச்சி பெறுமாறு வற்புறுத்துகிறது; இதைப் போலச் சிங்கள உத்தியோகத்தர் எவரையேனும் தமிழில் தேர்ச்சி பெறுமாறு கேட்கவில்லை; தமிழ்ப் பகுதிகளுக்குச் சிங்கள உத்தியோகத்தர்களை அனுப்பும்போதுகூடத் தமிழ் தெரிந்தவர்களை அனுப்பவில்லை.

### 'வாடா...போடா...'

தமிழ் சிறிதும் தெரியாத பொலிசார் தமிழ்ப் பகுதிகளில் கடமை ஆற்றுதற்கு அனுப்பப்படுகிறார்கள். பிரதம அமைச்சரின் அமைச்சே இப்பணியைச் செய்கின்றது. இந்தப் பொலிசார் தமிழ் மக்களை "ஏய், வாடா, போடா, பன்றி" என்று மரியாதையின்றிக் கொச்சைத் தமிழில் அழைக்கின்றனர். இதைப் பற்றிப் பல முறை நான் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினேன்! எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆளுகிறவர்கள் ஆளப்படுகிறவர்களை—அடிமைகளை எப்படியும் நடத்தலாம் தானே!

வவுனியாவில் தமது கடையில் கறுப்புக்கொடி கட்டிய தமிழர் ஒருவரைச் சிங்களப் பொலிசு ஒருவர் பிடித்து, **'உனக்கு நாடு வேண்டுமா' என்று சிங்களத்தில் கத்திக்கொண்டு** அவருடைய மண்டை உடைய அடித்தார். அடிமைத் தமிழருக்கு இது போதுமா?

## சுயாட்சிக் கழகத்தின் சுயரூபம்!

சுயாட்சிக் கழகமும் அதன் தலைவரென்று வற்புறுத்தும் திரு. வ. நவரத்தினமும் இந்தக் கழகத்தைச் சேர்ந்தவர்களெனக் கூறிவரும் திரு. க. சிவானந்த சுந்தரமும் புதிய வழக்குரைஞர் திரு. கோடீசுவரனும் கொண்ட [illegible] வம் இப்பொழுது தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்து விட்டது.

சென்ற தேர்தலில் அடைந்த பெருந்தோல்வியின் பின் இயங்காமல் அடங்கிக்கிடந்த இந்தச் சுயாட்சிக் கழகம் இப்பொழுது தினபதியுடன் சேர்ந்து துரோகச் செயல்களில் ஈடுபட்டுள்ளது தமிழர் கூட்டணியினரின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் சில்லரைச் சேட்டைகளை உண்டாக்கிவிட்டு தினபதியிலும் விடுதலையிலும் தாங்கள் விரும்பியவாறு 'கூட்டத்தில் எதிர்ப்புக்குரல் — இளைஞர்களின் எதிர்ப்பு ஆவேசம்- சரமாரியான கேள்விகள் தலைவர்களின் திண்டாட்டம்!' என்று தலையங்கங்கள் தீட்டத் தினபதி விடுதலைக் கும்பல் சூழ்ச்சித் திட்டம்தீட்டியது ஆனால் இந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது.

சுயாட்சிக் கழகப் பிரமுகர் ஒருவர் யாழ்ப்பாணம் வாடி வீட்டில் கூட்டத்திலே சலசலப்பை உண்டாக்கக் கையாள்களை அனுப்பி விட்டுக் காத்துக் கிடந்தாராம் காரியம் கைகூடாமையால் இருந்த இடமும் தெரியாமல் மறைந்து விட்டாராம்.

## சிங்களம் வேண்டாம்!

புலோலி ஆண்கள் மகா வித்தியாலயத்தில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படக்கூடாது என்று பெற்றோர் ஆசிரிய சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. சிங்களம் கற்பிப்பதை எதிர்த்து 44பேரும், கற்பிக்கவேண்டும் என்பதை ஆதரித்து 10பேரும் வாக்களித்தனர். 'புலோலி' தமிழ் மக்களின் தன்மான உணர்ச்சி வாழ்க!

## பிலிப்புப்பிள்ளை ஜே. பி. பதவியை உதறினார்!

"'புதிய அரசியல் சட்டம் தமிழினத்தின் மரண சாசனம். அந்தச் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்து எனது சமாதான நீதவான் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க நான் துளியும் விரும்பவில்லை. எனவே எனது சமாதான நீதவான் பதவியைத் துறக்கிறேன்—"

—இவ்வாறு நீதியமைச்சருக்கு எழுதிவிட்டு தனது சமாதான நீதவான் பதவியை உதறியெறிந்திருக்கிறார் வசாவிளானைச் சேர்ந்த திரு. வ. பிலிப்புப்பிள்ளை. அவரது மான உணர்வைப் பாராட்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


4வது ஜனத்திரள் நிறைந்த வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) லிடோ (யாழ்நகர்)

சிவாஜிகணேசன் ஜெயலலிதா (இணைந்து நடித்த முதல் வண்ணப்படம்)

பாலாஜி — நிர்மலா — லட்சுமி — சோ — தேங்காய் சீனிவாசன்

குழந்தை நட்சத்திரம் மாஸ்டர் பிரபாகர் உட்பட பன்னிருவர் நடித்த



ஜேயார் மூவீஸ்

# எங்க மாமா

(ஈஸ்மன் கலர்)



3வது வாரமாக காட்சியளிக்கிறது

கொழும்பில் கடைசித் தடவையாக

செல்லமகால்

சிவாஜிகணேசன் - சாவித்திரி

கே. பி. சுந்தராம்பாள் - டி. ஆர். மகாலிங்கம்

நாகேஷ் நடித்த

ஏ. பி. நாகராஜனின் வண்ணப்படம்

# திருவிளையாடல்

2வது மாதம்

கெயிட்டி (கொழும்பு) வின்சர் (யாழ்நகர்)

கே. ஆர். விஜயா

ரவிச்சந்திரன்—நாகேஷ்

ரி. கே. பகவதி—நடித்த



சிலோன் என்டடெயின்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கிறது



14வது வாரம் சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, பாலாஜி,

சந்திரபாபு, சுந்தரராஜன், ரங்கராவ்,

நாகையா, ராகவன், பண்டரிபாய், மனோகர்

நடிக்கும்

சுஜாதாவின்

# ராஜா

(ஈஸ்மன் கலர்)


சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் ஜூலை மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org